விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812
(3940)

## பட்டதாரி இளைஞன் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பகுதியில் பட்டதாரி இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் தெற்கு கொடி 23

தென்மராட்சியில்

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 02

முகாமைத்துவ உதவியாளர்

## போட்டி பரீட்சைக்கான முடிவுகள் வெளியீடு

(கொழும்பு)

முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தரம்-III போட்டி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. 24

## வடக்கில் வாழ்கின்ற மக்களை விட
# இந்தியாவின் உறவே அரசுக்கு முக்கியம்!
## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு



**(கொழும்பு) வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களை விட இந்திய மத்திய அரசுடனான உறவே நல்லாட்சி அரசுக்கு முக்கியமாக காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.**

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்து மீன்பிடிப்பதால் இலங்கைக்கு 6 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக் 02

வடக்கு - கிழக்கு செயற்திட்டங்களில்

## மக்கள் பிரதிநிதிகளான எம்மை நிராகரிப்பது கண்டிக்கத்தக்கது

பாராளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மை நிராகரித்து விட்டு வடக்கு கிழக்கில் செயற்திட்டங்களை மேற்கொள்ள ஜனாதிபதி முனைவது கண்டிக்கப்பட வேண்டியது என தமிழரசுக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மக்கள் சேவை 8-வது தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டப 24

## இராணுவத்தை வெளியேற்றி பொலிஸ் அதிகாரத்தை தாருங்கள்
### வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி பொலிஸ் அதிகாரத்தை தாருங்கள் என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 03

யாழில் பாடசாலை

## மாணவனை காணவில்லை

பொலிஸில் முறைப்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் கொள் 24

## புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதே எமது முக்கிய நோக்கம்!
### சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்கவேண்டும் என்பதே எமது முக்கிய நோக்கம் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் உயிருடன் வாழவேண்டுமானால், நாங்கள் நிம்மதியுடன் வீதிகளில் நடக்கவேண்டுமானால், எங்களுடைய பிள்ளைகள் பாடசாலை சென்று மீண் 23

## சட்டவிரோத காணி பதிவு நடவடிக்கை யாழில் அதிகம்

அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான காணி பதிவு நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்து 02

## வடக்கு முதல்வர் வேட்பாளர் குறித்து விரைவில் தீர்மானம்

ரெலோ தலைவர் அடைக்கலநாதன்

(கொழும்பு)

அடுத்த வாரம் ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது தமிழ்த் தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூடி வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது தீர்மானிக்கப்படும் என ரெலோ அமைப்பின் தலை 02

## இராணுவத்திடமுள்ள காணிகள் தொடர்பில்

விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் 02

## எனது அரசை கவிழ்க்க அமெரிக்கா நிதியுதவியது
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த தகவல்



(கொழும்பு)

தமது அரசாங்கத்தை கவிழ்க்க அமெரிக்கா நிதியுதவி செய்துள்ளதாகவும், பணம் கொடுத்தவர்களே இதனை ஒப்புக் கொண்டிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

[illegible]

## யுத்தத்தின் பின்னரும் வடக்கில் அச்சுறுத்தல் தொடர்கின்றன
### ஒன்றிணைந்த எதிரணி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தற்போது தலைதூக்கியுள்ள ஆயுத குழுக்களினால் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் நிம்மதியாக வாழ்ந்த மக்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெகா பவர்**
திகதி 2018/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 247
Q 11 37 57 77 79
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2018.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 1808
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 09 60 63
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**
திகதி 2018/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 1339
எழுத்து 10
வெற்றி இலக்கம் 36 59 62 66 64 10
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2018/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 3693
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 9 8 7 0 0
தேசிய லொத்தர் சபை

## சட்டவிரோத காணி...

ள்ளார்கள்.

ஜனாதிபதி மக்கள் சேவை எட்டாவது தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

மக்களுக்கு முழுமையான பலன் கிடைக்கும்படியான சேவைகளை அரச அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டும். களப்பணி மேற்கொண்டு மக்களுக்கு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு வழங்க வேண்டும்.

மாவட்ட இணைப்பு குழுக்களின் செயற்பாடுகள், பிரதேச இணைப்பு குழுக்களின் செயற்பாடுகள் அனைத்தும் உள்ளநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் தான் உள்ளது. இணைப்பு குழுவில் உள்ளவர்கள் திறம்பட செயற்பட வேண்டும். அப்போது தான் பிரச்சினைகளை எளிதில் தீர்த்துக்கொள்ள முடியும்.

போதைப்பொருள் வியாபாரம் பெரும் பிரச்சினையாக இருப்பதாக இந்த பிரதேச மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள். படகுகள் ஊடாக இந்த பிரதேசத்துக்கு வருவதாக அறிய முடிந்தது. இது தொடர்பாக பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் எமது செயற்திட்டத்தின் ஊடாக சிறிய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ததுக்கொள்ள முடியும்.

மேலும் காணி தொடர்பான பிரச்சினைகள் இங்கு அதிகமாக உள்ளது. அது தொடர்பில்சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

காணி தொடர்பான மோசடிகள் யாழ்ப்பாணத்தில் அதிகமாகவுள்ளது. அதை தீர்த்து வைப்பது எமது அமைச்சின் பொறுப்பு

கள்ள உறுதிகள் அதிகம் எழுதப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்து சிலர் பெற்றுள்ளார்கள். இது தொடர்பாக காணி பதிவு திணைக்களம் ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

சட்டவிரோதமான காணி பதிவுகள் வடக்கிலும் தெற்கிலும் மிக அதிகமாக எழுதப்பட்டுள்ளது. அவை போர் காரணமாக நடைபெற்றுள்ளது. அத்துடன் காணி பதிவு திணைக்களத்தில் உள்ள பதிவு புத்தகங்களின் பக்கங்கள் கிழித்து எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல பிரச்சினைகள் உள்ளன. இவை சரி செய்யப்படவேண்டும்.

அரசு தமது காணிகளை கொள்ளையடித்துள்ளது என வெளிநாட்டில் உள்ளவர்கள் வந்து தெரிவிக்கிறார்கள். எனவே கள்ள உறுதி எழுதுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறாக பிரதேச மட்டத்தில் பிரச்சினைகளை தீர்க்கும் போது மக்களின் பல பிரச்சினைகளை குறைத்து கொள்ள முடியும். என மேலும் தெரிவித்தார். (ம-9)

## குடும்பப் பெண்...

மீசாலை வடக்கு மீசாலை பகுதியில் உள்ள வீட்டு வளவொன்றில் நின்ற மாமரத்தில் 55 வயதான பெண் ஒருவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் விசுவமடுவைச் சேர்ந்த 55 வயதான ஐயாத்துரை வள்ளியம்மை என்ற பெண்ணே மரணித்துள்ளார்.சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டு நேற்று திங்கட்கிழமை மதியம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பில் மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி இ.இளங்கீரன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9,30,78)

## யுத்தத்தின் பின்னரும்...

அமைந்துள்ளதாக ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினரான ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை வழங்கிய விசேட நேர்க்காணலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், வடக்கில் தற்போது ஆவா மற்றும் தனுரொக் குழுக்களின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துவிட்டன. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து நிம்மதியாக வாழ்ந்த வடக்கு மக்களுக்கு இது பாரிய அச்சுறுத்தலாகவே இருக்கின்றது.

இந்தக் குழுக்களும் விடுதலைப்புலிகள் போல எதிர்க்காலத்தில் வந்துவிடுவார்களோ எனும் அச்சத்தில் தான் அவர்கள் காணப்படுகின்றார்கள்.

எனினும், இவை தொடர்பில் அங்குள்ள அரசியல்வாதிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸார், இராணுவத்தைக் கொண்டு இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதனை தடுக்கும் வகையிலேயே செயற்படுகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன், மகிந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தற்போது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். ஆனால், வடக்கில் காணப்படும் இந்த ஆயுதக்குழுக்கள் தொடர்பில் இதுவரை அவர் கருத்துக்களை கூறியுள்ளாரா? குறைந்தது, அரசாங்கத்துக்கு ஏனும் இதுகுறித்து அறிவித்துள்ளாரா? இல்லை.

இவர்களுக்கு மக்களை அடகுவைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கம் மட்டும்தான் இருக்கின்றதே ஒழிய, அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றோ, வடக்கு தமிழர்களை நிம்மதியாக வாழ வைக்க வேண்டும் என்றோ எண்ணமில்லை எனத் தெரிவித்தார். (ம)

## வடக்கு முதல்வர்...

வர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, ரெலோ அமைப்பினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தொடர்பில் விரைவில் கட்சித் தலைமைகள் கூடி தீர்மானங்களை எடுக்கும் என அவர் இதன் போது குறிப்பிட்டார். (ம)

## இராணுவத்திடமுள்ள...

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றதுடன், இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான திலக் மாரப்பன மற்றும் வஜிர அபேவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மகாவித்தியாலய காணி, இரணைமடு பொது சந்தைக்குரிய காணி, கரைச்சி பிரதேச சபையின் நூலக காணி, முட்கொம்பன் தென்னந்தோப்பு காணி, இரணைமடுவில் பொது மக்களின் காணி, பூநகரி கஜூ கூட்டுதாபன காணி, வட்டக்கச்சி விவசாயத் திணைக்கள காணிகள் இராணுவத்தினர் வசம் உள்ளமை தொடர்பில் அமைச்சர்களுடன் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

## இந்தியாவின் உறவே...

க்கையில்,

சுமார் 100க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கு சொந்தமான மீன்பிடி உபகரணங்களை அரசுடமை ஆக்குமாறு யாழில் உள்ள தொழிற்சங்கங்கள் மத்திய அரசுக்கு தெரிவித்திருந்தனர்.

ஆனால் இந்தியாவுடன் உள்ள நட்புறவு காரணமாக இவர்களை விடுவிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஆகவே கடற்றொழிலை ஆதாரமாக கொண்டு வாழும் வடக்கு மக்களை விட இந்தியாவுடன் இருக்கும் உறவே பெரிதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ட்ரம்ஸ் விற்பனைக்கு
புதிதாய் வாங்கி அதிகம் பாவிக்கப்படாத (MAXITONE) DRUMS SET விற்பனைக்குண்டு.
T.P:- 0777178713, ஆனைக்கோட்டை

O/L சித்தியடையவில்லையா???
வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்தில் இணைய புதிய வாய்ப்புக்கள். யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய எமது கிளைகளுக்கு 20 உயர் பதவி வெற்றிடங்களும் 40 பேர்களுக்கு பதவி வெற்றிடங்களும் உள்ளன. நேர்முகத் தெரிவின் மூலம் பதவிகள் தெரிவு செய்யப்படும்.
- 18-35 வயதிற்குட்பட்டவர்கள்.
- முன்னனுபவம் அவசியமில்லை.
- தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- பயிற்சிக்காலகட்டத்தில் 18,000/= வரையிலும் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45,000/= மேல் (EPF, ETF) அடங்கலுடன் வழங்கப்படும்.
மேலதிக தொடர்களுக்கு:- 076 676 7620, 077 157 1699

Quality Royal Guaranteed
நல் ஆரோக்கியத்திற்கு
"றோயல் சுத்தமான தேன்"
உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
Packed By: Royal Industries R
Marketed By: சிவா நறுமணப் பூங்கா
இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2567
குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.





மணிவிழா நாயகனை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
பிரம்மஸ்ரீ.
சண்முகசுந்தரசர்மா
மோகனகிருஷ்ணசர்மா
(SP.Trd.English,SLTS-1)



சேவை விபரம்
மன்/பரப்புக் கடந்தான் அ.த.க. பாடசாலை
(01.02.1984-31.12.1985)
மன்/நானாட்டான் ம.வி.
(01.01.1986-23.02.1987)
பேராதனை ஆங்கில ஆசிரியர் கலாசாலை
(24.02.1987-31.12.1988)
மன்/நானாட்டான் ம.வி.
(01.01.1989-05.11.1991)
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
(06.11.1991-02.01.2000)
யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்
(03.01.2000-09.09.2001)
யா/இடைக்காடு மகாவித்தியாலயம்
(10.09.2001-23.02.2014)
பிராந்திய ஆங்கில ஆதார நிலையம் -யாழ்ப்பாணம்
(01.01.2002-23.02.2014)
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்
(24.02.2014-03.07.2018)
Congratulations
34 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து இன்று அகவை 60இல் ஓய்வுபெறும் எங்கள் ஆங்கில ஆசானைப் பல்லாண்டு காலம் இறையருளால் நலம்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவோம்

## மத்திய அமைச்சர்களின் முன்னிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு









(படங்கள்:- பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

போர் முடிந்து அடுத்த மே மாதம் 10 வருடங்கள் ஆகப் போகின்றது. இன்னமும் எம்மைப் போர்க்கால மக்களாகப் பார்த்து இராணுவ கண்காணிப்பை முடுக்கி வைத்து வருவது எம்மேல் நம்பிக்கை இன்மையைக் காட்டுகின்றது. படிப்படியாக இராணுவ பிரசன்னத்தைக் குறைப்பதாக அரசாங்கம் உத்தரவாதம் தந்திருப்பினும் அது நடைபெறாமலே இருக்கின்றது. மாறாக குற்றச் செயல்கள் இங்கு கூடியுள்ளன. அவற்றைத் தடுக்க எமக்கு அதிகாரங்கள் தரப்படவில்லை. பொலிஸார் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இராணுவம் வெளியேறி பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் இன்றைய வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரிய காரியமன்று. உள்ளூர் வாசிகளை ஆட்கொண்டு வெளியூர் வாசிகள் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள எமது மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் மத்திய அமைச்சர்கள் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மக்கள் சேவை - தேசிய நிகழ்ச்சித் திட்ட 8 ஆவது உத்தியோகபூர்வப் பணி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் அவர்களின் கடமைகளுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் மேலும் பிரதேசத்தின் தேவைப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதியின் பணிப்பின் கீழ் பிரதமரின் வழிகாட்டலில் உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் 8ஆவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற இத் தருணத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

வடபகுதியில் வாழ்கின்ற மக்கள் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் தேவைகளைவிட அதிகளவு தேவைகளையுடையவர்கள். போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பல தேவைகளை அவர்கள் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இவை பற்றி விரிவாக இந்த மக்கள் சேவை நிகழ்ச்சித் திட்டத்தில் ஆராயப்பட வேண்டும். நீண்டகால ஏக்கத்தில் தமக்கு விடிவு கிட்டாதா? என எமது மக்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை அனைவரும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். இம் மக்களின் அத்தியாவசிய சேவைகள், அடிப்படைத் தேவைகள் பற்றி அறிந்திருந்தால்தான் அவர்களுக்குரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஒரு புறம், நிர்வாக ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மறுபுறம், முதலீட்டுடன் சேர்ந்த பொருளாதார மேம்பாடு சம்பந்தமான பிரச்சினைகள் இன்னொருபுறம், மனிதாபிமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய வேறு சில பிரச்சினைகள் பிறிதொருபுறம் என்று எமது பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றிற்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். வெறுமனே அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கைகளில் இறங்கினால் எமது மக்களின் பிரச்சினைகள் உண்மையாகத் தீர்க்கப்படா.

எமது உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவை தனிப்பட்ட முறையில் நான் மிகவும் நேசிக்கின்றேன். மக்கள் பணியாற்ற வேண்டும் என்பதில் மிகவும் துடிப்பாக இருப்பவர் அவர். மனிதநேயம் மிக்கவர் அவர். அவரின் வருகை எம்மை மகிழ்விக்கின்றது. எமது மக்களின் நீண்டகாலத் தேவைகளைக் கண்டறிந்து உரிய நிவாரணங்களை அவர் பெற்றுக் கொடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது மக்களில் பலர் போரின் விளைவாக உயிர் இழப்புக்களைச் சந்தித்தது ஒருபுறமிருக்க, பொருள் பண்டங்கள், வீடு வளவுகள் என அத்தனையையும் தொலைத்துவிட்டு நடைப்பிணங்களாக யுத்த வடுக்களை உடல்களிலும் உள்ளங்களிலும் சுமந்தவர்களாக சுற்றித்திரிவது எமக்கு மிகுந்த மனவருத்தத்தை தருகின்றது. இம் மக்களுக்கான இருப்பிட வசதிகள் அவர்களுக்கு ஏற்றவாறு செய்து தரப்பட வேண்டும். அவர்கள் வாழ்ந்த நிலங்கள், அவர்கள் தொழில் செய்கின்ற பூமிகள், கடல் வளங்கள், விவசாய நிலங்கள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு இராணுவம் அவசியமானது. தமது சொந்த நாட்டை ஏனைய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பதற்கும் உள்நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் இராணுவத்தின் பங்கு அவசியமானது. ஆனால் எமது பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் உணவகங்களை நடத்துவதற்கும் காணிகளைத் தம்வசப்படுத்தி வைத்திருப்பதற்கும் குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் இராணுவ வீரர்களின் சேவைகள் தேவைப்படமாட்டாது. போர் முடிந்து அடுத்த மே மாதம் 10 வருடங்கள் ஆகப் போகின்றது. இன்னமும் எம்மைப் போர்க்கால மக்களாகப் பார்த்து இராணுவ கண்காணிப்பை முடுக்கி வைத்து வருவது எம்மேல் நம்பிக்கை இன்மையைக் காட்டுகின்றது. படிப்படியாக இராணுவ பிரசன்னத்தைக் குறைப்பதாக அரசாங்கம் உத்தரவாதம் தந்திருப்பினும் அது நடைபெறாமலே இருக்கின்றது. மாறாக குற்றச் செயல்கள் இங்கு கூடியுள்ளன. அவற்றைத் தடுக்க எமக்கு அதிகாரங்கள் தரப்படவில்லை. பொலிஸார் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இராணுவம் வெளியேறி பொலிஸ் அதிகாரம் எமக்குக் கையளிக்கப்பட்டால் இன்றைய வன்முறைக் கலாசாரத்தை வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு பெரிய காரியமன்று. உள்ளூர் வாசிகளை ஆட்கொண்டு வெளியூர்வாசிகள் தமது காரியங்களைச் சாதித்துக்கொள்ள எமது மக்கள் இடம்கொடுக்க மாட்டார்கள்.

இந்நிலையில் வேலைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை இராணுவத்திற்கு வழங்கி அதன்மூலம் எமது வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதென்பது இந்நாட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான ஒரு செயற்பாடாகவே அமையும். இதனால்தான் இப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தின் செறிவை குறைக்குமாறு நான் பல இடங்களிலும் எடுத்துரைத்து வருகின்றேன். நீதிபதிகள் போல் இராணுவத்தினரும் ஒதுக்குப்புறமாக இருந்து தமது கடமைகளை ஆற்ற வேண்டும். மக்கள் மனதைத் தம்வசப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் மக்களுடன் இராணுவத்தினரைச் சேர்ந்து வாழவிடுவது எதிர்காலத்தில் பல சங்கடங்களை ஏற்படுத்தும்.

இராணுவ அதிகாரிகள் மீதோ, போர் வீரர்கள் மீதோ எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் எனக்கு இல்லை. இராணுவ உயர் அதிகாரிகளுடன் நான் சிறந்த உறவை வெளிப்படையாகக் கொண்டிருக்கின்றேன். ஆனால் கொள்கை அடிப்படையில் படையினர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் கபட நோக்கங்கள் கொண்டிருக்கக் கூடாது. எம்மை வாழ வைப்பதாகக் கூறிக் கொண்டு எம்மை எஞ்ஞான்றும் கட்டுப்பாடுகளுக்குள் வைக்கப்பட வேண்டிய மக்களாக கணித்து வாழக் கூடாது.

நாம் வாழ்வது எமது பாரம்பரிய நிலங்களில். இங்கு இருக்கும் இயற்கை வளங்கள் யாவும் இங்குள்ள மக்களுக்கே சொந்தம். அவற்றை சூறையாடிச் செல்வதையோ தொடர்ந்து ஆக்கிரமிப்பில் வைத்து வருவதையோ எமது மக்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணக் கூடாது. ஏதாவது எச்சில் துண்டுகளை எறிந்தால் அவர்கள் எம்வசம் இருப்பார்கள் என்றும் எண்ணக் கூடாது. எமது காணிகள் எமக்கு எந்தளவுக்கு முக்கியமோ எமது சுதந்திரமும் எமக்கு மிக முக்கியம். எம்முடன் கலந்தாலோசித்தே எமக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எம்மைப் பங்குதாரர்களாக ஏற்றே எமக்கான நன்மைகள் செய்து தரப்பட வேண்டும். எமக்கான அபிவிருத்திகளை எமக்கூடாகச் செய்ய முன்வாருங்கள். எமக்கூடாக எனும்போது நான் மாகாண நிர்வாகத்தையே சுட்டுகின்றேன். எம்மை உங்களுக்குச் சரிசமமானவர்கள் என்று நீங்கள் ஏற்றுக் கொண்டால்தான் பங்குதார வாழ்க்கை பயன் அளிக்கும். அந்நிலையில் மத்தியும் மாகாணமும் சேர்ந்து வேலை செய்யலாம். திட்டங்களையும் நிதியையும் உங்கள் கைவசம் வைத்துக் கொண்டு மாகாண அலுவலர்களைக் கொண்டு உங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இவற்றை எல்லாம் எமது அமைச்சர் நன்கு புரிந்து கொண்டவர் என எண்ணுகின்றேன். எனவே எமது எதிர்பார்ப்புக்களை நன்கறிந்து எமது மனோநிலைகளை நன்கு புரிந்து, நீங்கள் இப் பகுதி மக்கள் தொடர்பாக, அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக உயர் அதிகாரிகளுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் தொடர்ந்து வெளிப்படையாகப் பேச்சுக்களை முன்னெடுங்கள். அவற்றின் அடிப்படையில் எமது பிராந்தியத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கள் சிதைவுறா வகையில், பாரம்பரியங்கள் பழுதுறா வகையில், கலாசார சீரழிவுகள் நடைபெறா வகையில் உயரிய திட்டங்களைத் தீட்டி எம் மக்களுக்கு உதவ முன்வாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கோலடித்து ஆர்ப்பரிக்கும் நெய்மர்

# நெய்மர் 'ராஜ்யம்': பிரேசில் 'பிரமாதம்'

## காலிறுதிக்கு முன்னேறி அசத்தல்

உலகக் கிண்ண தொடரில் 'ரவுண்ட் 16' போட்டியில் 'ரவுண்டு' கட்டி ஆடிய நெய்மர், ஒரு கோல் அடித்து மெஸ்சி, ரொனால்டோ போல ஏமாற்றாமல், தனது ராஜ்யத்தை நிலைநிறுத்தி பிரேசில் அணியை காலிறுதிக்கு அழைத்துச் சென்றார்.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் 'ரவுண்ட் 16' போட்டியில 'நம்பர்-2' அணியான நெய்மரின் பிரேசில் அணி, 15ஆவது இடத்திலுள்ள மெக்சிகோவை சந்தித்தது.

தொடர்ந்து 13 ஆவது முறையாக 'ரவுண்ட் 16' போட்டியில் களமிறங்கிய பிரேசில் அணிக்கு, 5வது நிமிடத்தில் நெய்மர் வேகமாக அடித்த பந்தை மெக்சிகோ கோல் காப்பாளர் கிலர்மோ ஓச்சா தடுத்து அசத்தினார்.

25ஆவது நிமிடம் கோல் போஸ்ட்டுக்கு மிக அருகில் சென்ற நெய்மர் அடித்த் பந்து, மீண்டும் கிலர்மோவால் தடுக்கப்பட்டது. அடுத்த 7ஆவது நிமிடம், 32ஆவது நிமிடம் கோல் போஸ்டுக்கு 6 மீ., தூரத்தில் இருந்து பிரேசிலின் கேபிரியல் ஜீசஸ் கோல் அடிக்க முயன்றார். ஆனால் பந்து கோல் காப்பாளர் கிலர்மோ கையில் பட்டு திரும்பியது.

39ஆவது நிமிடம் கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் நெய்மர் அடித்த பந்து கோல் போஸ்ட், வலது புறமாக சென்றது. முதல் பாதியில் 10 முறை முயற்சித்தும் பிரேசில் அணியால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

**தோல்வி இல்லை**

இரண்டாவது பாதியில் 51ஆவது நிமிடம் வில்லியன் அடித்த பந்து கோல் காப்பாளரைத் தாண்டி சென்றது. இதை அருகில் இருந்த ஜீசஸ் தவறவிட, வாய்ப்புக்காக காத்திருந்த நெய்மர் பந்தை வலைக்குள் தள்ளி கோல் அடித்தார். பிரேசில் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

நெய்மர் கோல் அடித்த போட்டிகளில் பிரேசில் தோற்றது இல்லை என்பதால், சக வீரர்கள் கூடுதல் வேகத்துடன் செயற்பட்டனர்.

58ஆவது நிமிடம் பிரேசில் வீரர் பவுலினோ அடித்த பந்து வேகமாக கோல் போஸ்ட் நோக்கிச் சென்றது. மீண்டும ஒருமுறை கிலர்மோ இதை சிறப்பாக தடுக்க, இரண்டாவது கோல் வாய்ப்பு நழுவியது.

**திடீர் அதிர்ச்சி**

71ஆவது நிமிடம் மெக்சிகோவின் லாயுன் நெய்மரை 'பவுல்' செய்ய, வலியால் துடித்தார் அவர். இதனால் 2014 தொடரைப் போல நெய்மர் பாதியில் வெளியேறி விடுவாரோ! என ரசிகர்கள் பயந்தனர். நல்லவேளையாக சிகிச்சைக்குப் பின் மீண்டும் பந்தை நோக்கி பாய்ந்தார்.

போட்டியின் 88ஆவது நிமிடம் மின்னல் வேகத்தில் பந்தை கொண்டு சென்ற நெய்மர், சக வீரர் பெர்மினோவிடம் 'பாஸ்' செய்தார். இதை அவர் அப்படியே கோலாக மாற்ற, பிரேசில் வெற்றி (2-0) உறுதியானது.

முடிவில் பிரேசில் அணி 2-0 என வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

**228 கோல்**

உலகக் கிண்ணத் தொடர்களில் அதிக கோல் அடித்த அணிகளில் ஜேர்மனியை (21 தொடர், 226 கோல்) முந்தி, 'நம்பர் 1' அணியானது பிரேசில். இந்த அணி விளையாடிய 19 தொடர்களில் 228 கோல் அடித்தது.

**16ஆவது முறை**

உலக கிண்ணத் தொடரில் 21 முறையும் களமிறங்கிய அணி பிரேசில். நேற்றைய 'ரவுண்ட் 16' போட்டியில் வென்ற இந்த அணி, 16 ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறியது.

**20 கோல்**

பிரேசில் அணிக்காக கடைசியாக விளையாடிய 19 போட்டிகளில் நெய்மர் 20 கோல் அடித்தார். 11 கோல் அடிக்க சக வீரர்களுக்கு உதவியாக இருந்தார். ஒட்டு மொத்தமாக 89 போட்டியில் 57 கோல் அடித்த நெய்மர், 35 கோல் அடிக்க உதவினார்.

**24ஆவது வெற்றி**

இரு அணிகள் மோதிய 41 போட்டிகளில் பிரேசில் நேற்று 24வது வெற்றியை பதிவு செய்தது. 7இல் 'சமன்' செய்தது. 10ல் மெக்சிகோ வென்றது.

உலகக் கிண்ணத் தொடரில் பிரேசில் அணி, 4ஆவது வெற்றியை பதிவு செய்தது. ஒரு போட்டி சமனாக, மெக்சிகோ ஒரு போட்டியிலும் வெற்றி பெறவே இல்லை.

**6ஆவது கோல்**

ரஷ்யா தொடரில் நேற்று மெக்சிகோவுக்கு எதிராக ஒரு கோல் அடித்த நெய்மர், உலக கிண்ணத் தொடரில் 38 முறை முயற்சி செய்து, 6வது கோல் பதிவு செய்தார். முன் னாள் வீரர்கள் ராபர்டோ ரிவ லினோ (6), ரெபேட்டோ (6) கோல் எண்ணிக் கையை சமன் செய்தார்.

- ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி 67, போர்த்துக்கலின் ரொனால்டோ 74 முயற்சிகளில் தான், முதல் 6 கோல் அடித்தனர்.

**13 கோல்கள்**

கடைசியாக மோதிய ஐந்து உலக கிண்ண தொடர் போட்டிகளில் மெக்சிகோ அணிக்கு, பிரேசில் ஒரு கோல் கூட விட்டுக் கொடுத்தது இல்லை. அதே நேரம் 13 கோல் அடித்துள்ளனர்.

# காலிறுக்கு முன்னேறுமா ஹரி கேனின் இங்கிலாந்து?



உலகக் கிண்ண கால் பந்து 'ரவுண்ட் 16' போட்டியில் இன்று இங்கிலாந்து, கொலம்பியா அணிகள் மோதுகின்றன.

இதில் இங்கிலாந்து அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினால் காலிறுதிக்கு முன்னேறலாம்.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால் பந்து தொடர் நடக்கிறது.

மொஸ்கோ நகரில் இன்று நடக்கும் 'ரவுண்ட் 16' சுற்றுப் போட்டியில் உலகின் 'நம்பர 12' இங்கிலாந்து அணி, 16ஆவது இடத்தில் உள்ள கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

**கேன் நம்பிக்கை**

லீக் சுற்றில் துனிசியா, பனாமா அணிகளை வீழ்த்திய இங்கிலாந்து அணி, பெல்ஜியத்திடம் தோல்வியடைந்தது.

'ஜி' பிரிவில் 6 புள்ளிகளுடன் 2வது இடம்பிடித்து 'ரவுண்ட் 16' சுற்றுக்கான இடத்தை உறுதி செய்தது.

பனாமா அணிக்கு எதிராக 'ஹட்ரிக்' கோலடித்த அணித் தலைவர் ஹரி கேன் (5 கோல்), இம்முறை அதிக கோல் அடித்தவர்களுக்கான பட்டியலில் முன்னிலை வகிக்கிறார். இவரது சிறப்பான 'போர்ம்' தொடர்ந்தால் நல்லது.

பனாமாவுக்கு எதிராக கோலடித்து உதவிய ஸ்டோன்ஸ், லிங்கார்ட் உள்ளிட்ட மற்றைய வீரர்களும் கைகொடுத்தால் இங்கிலாந்து அணி சுலபமாக காலிறுதிக்கு முன்னேறிவிடும்.

**மினா எதிர்பார்ப்பு**

ஜப்பானிடம் அதிர்ச்சி தோல்வியடைந்த கொலம்பிய அணி, பின் எழுச்சி கண்டு போலந்து, செனகல் அணிகளை தோற்கடித்தது.

இதன்மூலம் 'எச்' பிரிவில் முதலிடம் பிடித்து 'ரவுண்ட் 16' சுற்றில் நுழைந்தது. லீக் சுற்றில் கோலடித்து கைகொடுத்த மினா (2 கோல்), குயின்டிரோ, பால் கோவ், ஜுவான் குவாட்ராடோ மீண்டும் அசத்தினால் வெற்றி பெறலாம்.

**5 முறை**

சரவதேச கால்பந்து அரங்கில் இங்கிலாந்து, கொலம்பியா அணிகள் 5 முறை மோதியுள்ளன. இதில் இங்கி லாந்து 3ல் வெற்றி பெற்றது. இரண்டு போட்டிகள் 'சமன்' ஆனது.

இதில் இங்கிலாந்து 10, கொலம்பியா 3 கோலடித்தன.

# குரோஷியா குதூகலம்

## பெனால்டியில் டென்மார்க் சோகம்

உலகக் கிண்ண கால் பந்து தொடரின் காலிறுதிக்கு இரண்டாவது முறையாக முன்னேறியது குரோஷியா. 'ரவுண்ட் 16' போட்டியில் 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் 3-2 என டென்மார்க்கை வென்றது.

ரஷ்யாவில் 21ஆவது உலகக்கிண்ண தொடர் நடக்கிறது. இதன் 'ரவுண்ட் 16' போட்டியில் குரோஷியா - டென்மார்க் அணிகள் மோதின.

போட்டி தொடங்கிய முதல நிமிடத்தில் டென்மார்க்கின் நட்சன் 'த்ரோ' செய்த பந்தை வாங்கிய டிலானி, ஜார்ஜென்சனிடம் தர, அதை அவர் கோலாக மாற்றினார்.

உலகக் கிண்ணத் தொடரில் அடிக்கப்பட்ட 13ஆவது அதிவேக கோல் இது. அடுத்த 3ஆவது நிமிடம் குரோஷியாவின் மாண்ட்ஜுகிச் ஒரு கோல் அடிக்க ஸ்கோர் 1-1 என சமன் ஆனது.

இரண்டாவது பாதியின் 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (90+3வது) குரோஷியாவின் ராகிடிச் அடித்த பந்து கோல் போஸ்ட் வலது புறமாக சென்றது. இதனால் ஆட்ட முடிவில் (90 நிமிடம்) ஸ்கோர் 1-1 என சமன் ஆனது.

**கூடுதல் நேரம்**

இதையடுத்து போட்டி கூடுதல் நேரத்துக்கு (30 நிமிடம்) சென்றது. தலா 15 நிமிடங்கள் கொண்ட இதன் முதன் பாதியில் (90+14வது) டென்மார்க் கோல் கீப்பர் சிமெய்ச்சலை ஏமாற்றி கோல் அடிக்கச் சென்ற ரெபிச்சை 'பவுல்' செய்ய, குரோஷியாவுக்கு 'பென்ால்டி' கிடைத்தது. எளிதான இந்த வாய்ப்பை அணித் தலைவர் மட்ரிச் வீணடித்தார்.

முடிவில் கூடுதல் நேரத்திலும் ஸ்கோர் சமமாக (1-1) இருந்ததால், வெற்றியாளரை முடிவு செய்ய போட்டி 'பெனால்டி ஷூட் அவுட்டுக்கு' சென்றது. இதில் இரு அணிக்கும் தலா 5 வாய்ப்பு கொடுக்கப்படும். இதில் அதிக கோல் அடிக்கும் அணி வெற்றி பெறும்.

**வீணடித்த டென்மார்க்**

முதல் வாய்ப்பு: எரிக்சன் (டென்மார்க்), படெல்ஜி (குரோஷியா) வீணடித்தனர் (0-0).

2ஆவது வாய்ப்பு: சிமோன் (டென்மார்க்), கிராமரிச் (குரோஷியா) கோல் அடித்தனர் (1-1).

3ஆவது வாய்ப்பு: கிரான் டில்லி (டென்மார்க்), மாட்ரிச் (குரோஷியா) கோல் அடித்தனர் (2-2).

4ஆவது வாய்ப்பு: சியோன் (டென்மார்க்), பிவரிச் (குரோஷியா) வீணடித்தனர் (2-2).

5ஆவது வாய்ப்பு: ஜோர்ஜென்சன் (டென்மார்க்) அடித்த பந்தை எளிதாக தடுத்தார் குரோஷிய கோல்காப்பாளர் சுபாசிச். அடுத்து குரோஷியா கோல் அடித்தால் வெற்றி என்ற நிலையில், ராகிடிச் வலது புறமாக அடித்த பந்து கோல் ஆனது. இதனால் 3-2 என்ற கோல் கணக்கில் குரோஷியா 'திரில்' வெற்றி பெற்றது. 1998க்குப் பின் காலிறுதிக்கு முன்னேறியது.



குரோஷியாவின் அரணாக செயற்பட்ட சுபாகிச்சுடன் வெற்றியைக் கொண்டாடும் அணித் தலைவர் மட்ரிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் கௌரவிப்பும் முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கலும் மறைந்த மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் நேற்று முன்தினம் ஸ்ரீ நாரதா முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மாகாண சபை உறுப்பினர் சிவயோகன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் தமிழ்ச்சங்க அருட்தந்தை வண.தமிழ்நேசன் அடிகளார், ஸ்ரீநாரதா வித்தியாலய முன்னாள் அதிபர் க.இராசரத்தினம், உலக தமிழர் பண்பாட்டு இயக்க அறங்காவலர் வேல்.வேலுப்பிள்ளை, உலக தமிழர் பண்பாட்டு இயக்க தலைவர் சரவணையூர் விசு.செல்வராசா, தென்னாபிரிக்க தமிழ் பாடசாலை அதிபரும் உலக தமிழர் பண்பாட்டு இயக்கத் தலைவருமான எம்.தர்மகுமாரி, ஸ்ரீநாரதா வித்தியாலய அதிபர் ச.சுவேந்தன், ஜே/363 சமுர்த்தி உத்தியோகத்தர் ச.குவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: மகாலிங்கம்)

# நாட்டின் மொத்தக் கடனில் 77% மகிந்த ஆட்சியில் பெறப்பட்டது

## நிதியமைச்சு அறிக்கை

(கொழும்பு)

2017ஆம் ஆண்டுக்காக திறைசேரி பகிரங்கப்படுத்திய மொத்த உற்பத்தியில் அரசாங்க கடன் மற்றும் மொத்த உற்பத்தியை ஒன்றுடன் ஒன்று ஒப்பிடுகையில், இதன் வேறுபாடுகளைக் காண முடியும் என்று முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்திருந்த விடயத்தை நிராகரிப்பதாக திறைசேரி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த விடயங்களை திரிவுபடுத்தியுள்ளார். அடிப்படையில் உண்மையான விடயங்களை மறைக்க முயற்சித்துள்ளார் என நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"2017 ஆம் ஆண்டுக்குரியது எனக்கூறி, கடன் மற்றும் மொத்த உற்பத்திக்கு இடையில் 3 சதவீத வித்தியாசம் இருப்பதாகக் கப்ரால் குறிப்பிட்டார். எனினும் 2010 தொடக்கம் 2013ற்கு இடையில் அக்காலப்பகுதியில் நிதியமைச்சரின் முன்மொழிவுகள் மற்றும் அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானங்களுக்கு அமைவாக, முக்கிய அரச தொழில்துறைகள் பல பெற்றுக் கொண்ட கடன்கள், அப்போதைய அரச நிதி அறிவிப்பில் உள்ளடக்கப்படவில்லை.

இதற்கமைவாக, முன்னைய அரசாங்கக் காலப்பகுதியில், புத்தளம் அனல்மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம், மத்தள விமான நிலையம் போன்ற திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை செலுத்த வேண்டியுள்ளன.

இந்தக் கடன்கள் மத்திய அரசாங்கத்தின் நிதி அறிவிப்பில் நீக்கப்பட்டு இலங்கை மின்சார சபைக்கும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கும், விமான நிலையத்திற்கும், விமான சேவைகள் அதிகார சபைக்குமாக உட்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு செய்யப்பட்ட இந்தக் கடன்கள், சம்பந்தப்பட்ட அரச தொழில்துறை ஊடாக மீண்டும் செலுத்த முடியும் என்ற தவறான நிலைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்து. அரசாங்கம் பெற்றுக் கொண்ட இந்தத் தீர்மானத்தின் முன்னிலையில், அன்று மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் பணியாற்றிய கப்ரால், இன்று அரச தொழில் துறையில் நிலவும் கடன் அரசாங்கத்தின் நிதி அறிவிப்பிற்குள் உள்வாங்கப்படாமை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ளாது கடன் மற்றும் மொத்த உற்பத்திக்கு இடையிலான வித்தியாசங்களை திரிவுபடுத்திக் காட்டுவதற்கு முயற்சித்துள்ளார்." என திறைசேரி தெரிவித்துள்ளது.

மேலும், "திறைசேரி கடன் மற்றும் தேசிய உற்பத்தி விகிதங்கள் தொடர்பிலோ, 2018ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டியிருந்த பாரிய கடன் சுமையை மறைப்பதற்கு எதுவும் இல்லை. வரலாற்றிலேயே இதுவரையில் பதிவான ஆகக்கூடிய கடன்தொகை 2.4 ட்ரில்லியன் ரூபாயாகும். இதனை நல்லாட்சி அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்தத் தொகையில் 77 சதவீதம் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட காலங்கடந்த கடன் தொகைக்கு ஏற்ப செலுத்த வேண்டியதாகும். மொத்த உற்பத்தி மற்றும் அரசாங்கத்தின் புள்ளி விபரங்களுடன் ஒப்பிட்டு விகிதங்களை கணிப்பீடு செய்வதில் திறைசேரி, தொகை மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது." எனவும் நிதியமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)

# ஆட்டோ அடித்து உடைப்பு



(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் சம்பந்தர் கடைக்குச் செல்லும் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆட்டோ ஒன்று அடித்து உடைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-60)


31 ம் நாளில் துயர் பகிர்கின்றோம்

திருமதி துளசிநாதன் பரமேஸ்வரி



எமது வித்தியாலய ஆசிரியர்
திருமதி குமாரி மனோரதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
துளசிநாதன் பரமேஸ்வரி
அவர்கள் இறைபதம்
அடைந்ததையிட்டு அவர்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4764)
பாடசாலைச் சமூகம்
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்


## இராசி பலன்

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வழிபாடு மகத்துவம் தரும்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** உதவுவதாக சொல்பவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு விலகும்.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காணாமல்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மனதில் நினைத்த புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் | | சுக், ராகு, புத |
| கேது, செவ் | | | |
| சனி | | குரு | |

03.07.2018

ஆனி 19, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 7.36 மணிவரை

சதயம் பின்னிரவு 12.56 மணிவரை

சுபநேரம் 10.27-11.57 மணிவரை

இராகுகாலம் 2.57-4.27 மணிவரை

வளவன்

**தனுசு:** தொழில் முன்னேற்றகரமாக அமையும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, மருத்துவச் செலவுகள் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"ஜனாதிபதி மக்கள் சேவை" எட்டாவது தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயலகங்களின் வழிநடத்தலில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட இந்த நிகழ்வு தொடர்பாக அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மாகாண திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் தொடர்பாக அமைச்சின் செயலாளரால் விளக்கமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# அலங்காரத் திருவிழா ஆரம்பம்

ஏழாலை மயிலங்காடு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அலங்காரத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. சிறப்பு நிகழ்ச்சியாகத் தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ.சிவ.வை.நித்தியானந்தசர்மா "சிவலீலை" எனும் பொருள் பற்றித் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்துவார் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன உத்தம மஹாயாக பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.59 மணி முதல் முற்பகல் 10.59 மணிவரை இடம்பெறும். எண்ணெய்க்காப்பு சாத்துதல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நாளை புதன்கிழமை 12 மணிவரை இடம்பெறும். (இ)

# நாம் அதிகாரத்தை கைப்பற்ற நினைப்பது மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கே அன்றி நாம் சுகபோகங்களை அனுபவிப்பதற்கல்ல

## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றி அரசியல் சுகபோகங்கள் காண்பது எமது நோக்கமல்ல. மக்கள் நாளாந்தம் எதிர்கொண்டுவரும் அவலங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் மீட்டு நிம்மதியான ஒரு வாழ்வியல் சூழ்நிலைக்கு இட்டுச் செல்வதற்காகவே அவ்வதிகாரங்களை நாம் கோருகின்றோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் வன்னி மாவட்டத்தின் கிளிநொச்சி, மன்னார் பிரதேச மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையை ஆட்சி செய்யும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்திருந்தால் எமது மக்கள் எதற்கெடுத்தாலும் வீதிக்கிறங்கி போராடும்சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

மாறாக மாகாணசபையின்அதிகாரங்களைக்கொண்டு மக்களது வாழ்வியல் தேவைப்பாடுகளையும் சமூக மேம்பாடுகளையும் கட்டியெழுப்பி புதிய எழுச்சியுடன் வளமான தேசமாக எமது மாகாணத்தை மாற்றியமைத்துக் காட்டியிருப்போம்.

அந்தவகையில் இன்று மக்களிடம் காணப்படுகின்ற தெளிவான நிலைப்பாடானது எதிர்காலத்தில் வரவுள்ள சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

அவ்வாறு அந்தச் சந்தர்ப்பம் மக்களால் முழுமையாக எமக்கு வழங்கப்படும் பட்சத்தில் எமது மக்கள் அபிவிருத்தியில் மட்டுமல்ல அரசியல் உரிமையிலும் வெற்றி கண்டவர்களாக வாழக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கிக் காட்டுவோம்.

அதற்கான ஆற்றலும் ஆளுமையும் மட்டுமல்ல தன்னம்பிக்கையும் என்னிடம் உண்டு என்றும் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இதன்போது குறித்த மாவட்டங்களின் பிரதிநிதிகள் தமது பிரதேசங்களில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் செயலாளர் நாயகத்திடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

குறித்த பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கருத்திற்கொண்ட செயலாளர் நாயகம் காலக்கிரமத்தில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாக செயலாளரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான வை.தவநாதன் உள்ளிட்ட கட்சியின் மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய முக்கியஸ்தர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் உடனிருந்தனர். (இ)

# றெஜினாவுக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டம்






(ஏறாவூர்)

அண்மைக் காலமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தெடர்ச்சியாக நடைபெற்றுவரும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்புணர்வு, படுகொலைச் சம்பவங்களை கண்டித்து குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்குமாறு வலியுறுத்தி மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினமும் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்தரம் கற்கும் மாணவர்கள் மற்றும் முற்போக்கு இளைஞர் அமைப்பு என்பன இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பாடு செய்த இப்பேரணியில் அரசியல் பிரமுகர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் சுழிபுரம் பாடசாலை மாணவி றெஜினா வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை, கிழக்கு மாகாணத்தில் சிறுமிகள் வன்புணர்வுக்குட்பட்டமை தொடர்பான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் ஆரம்பமான பேரணி அரசடி சந்தி வரை சென்று வீதியோரமாக நின்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள்காவல்துறையினரே கடமையில் ஈடுபடுங்கள், வேண்டும் வேண்டும்றெஜினா வுக்கு நீதி வேண்டும், அன்று வித்தியா, சேயா இன்றுறெஜினா நாளை?, நல்லாட்சி அரசே றெஜினாவின் படு கொலைக்கு நீதி வழங்கு, அரசே சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லையா, றெஜினாவின் படுகொலைக்கு தண்டனை வழங்கு, றெஜினாவின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம், நல்லாட்சி அரசில் காவல்துறை தூங்குகின்றதா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் கோஷங்களை எழுப்பினர். (இ)

# வரணியில் ரவுடிகளின் அட்டகாசம் அதிகரிப்பு!

(வரணி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி கறுக்காய்ப் பகுதியில் ரவுடிகளின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக மதியம் மற்றும் இரவு வேளைகளில் மது போதையில் வீதியில் நிற்கும் ரவுடிக்கும்பல் வீதியால் பயணிப்பவர்களை தகாத வார்த்தைகளால் பேசுவதுடன் அவர்களை தாக்குகின்றனர்.

அதுமட்டுமன்றி இரவு வேளையில் மதகில் இருந்து மதுபோதையில் வீதியால் பயணிப்பவர்கள் மீது கற்களைக் கொண்டு வீசுவதுடன் வெற்று பியர் ரின்களைக் கொண்டும் வாகனங்களின் மீது தாக்குதல் மேற்கொள்கின்றனர்.

அண்மையில் இரு இளைஞர்கள் மீது கற்களால் எறிந்துள்ளனர். அவர்கள் தட்டிக் கேட்டபோது ரவுடிக் கும்பல் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. மேலும் அன்றையதினம் மாலை வேளை கணவனும் மனைவியும் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வெற்று பியர் ரின்களைக் கொண்டு தாக்குதல் நடத்தி தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர். அதுமட்டுமன்றி இந்த ரவுடிக் கும்பல் இரவு வேளைகளில் பயணிப்போரை வழிமறித்து மிரட்டி பணம் பறிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

இவர்கள் மீது வழக்குகள் பல நீதிமன்றத்தில் உள்ளன. இருந்தும் இவர்கள் இவ்வாறான சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வீதியால் பயணிப்பதற்கு மக்கள் பெரிதும் அச்சப்படுகின்றனர்.

எனவே இந்த ரவுடிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதற்கு உயர் பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் வீதியால் பயணிப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# யாழ்.பல்கலையில் 'உண்மை இருப்பு' மூன்று ஓவியர்களின் ஓவியக் காட்சி

(யாழ்ப்பாணம்)

நாளை தொடக்கம் எதிர் வரும் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீடக் கட்டடத்தொகுதியிலுள்ளகலைக்கூடத்தில்நுண்கலைத்துறைமற்றும்கலைவட்டத்தின்ஏற்பாட்டில்"உண்மைஇருப்பு" எனும் தலைப்பிலான மூன்று ஓவியர்களின் ஓவியக்காட்சி இடம்பெறவுள்ளது. இக்காட்சியில் இளம் ஓவியர்களான அ.கத்தரினா, பி.யோ.கேமசிரோனி, வி.விமல் போன்றவர்களின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

ஓவியத்துறை மற்றும் சான்பியத் துறையில் ஆர்வமுடைய அனைவரும் இந்நி கழ்வில் கலந்து கொள்வதன் மூலம் பயன் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கையிடமிருந்து மீட்க வேண்டும்

## ஜி.கே.வாசன் வலியுறுத்து

(சென்னை)

இலங்கையிலுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கவும் சேதமடைந்த படகுகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தரவும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர், த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஜி.கே. வாசன் நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சனிக்கிழமை கடலுக்கு விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். வலைகளை விரித்து மீன் பிடிக்க முயன்றபோது அங்கு வந்த இலங்கை கடற்படை மீனவர்களைச் சுற்றி வளைத்து அச்சுறுத்தினர். இதனால் மீனவர்கள் பயந்த நிலையில் மீன்பிடி வலைகளை அப்படியே கடலில் தூக்கி எறிந்து விட்டு கரை திரும்பினர்.

இலங்கை கடற்படையின் இந்த அத்துமீறல் மிகவும்கண்டிக்கத்தக்கது. எனவே மத்திய, மாநில அரசுகள் மீனவர்கள் பிரச்சினையில் முக்கிய கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலுக்கு பாதுகாப்பை கொடுக்க தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்ல மத்திய பா.ஜ.க. அரசு இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் தொடர் இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் பாதுகாப்பற்ற தன்மைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அழுத்தம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றபோது இலங்கை கடற்படை தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப்பிடித்துச் சென்று இலங்கையில் வைத்துள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு சொந்தமான படகுகளின் எண்ணிக்கை சுமார் 226. இந்தப் படகுகளை எல்லாம் உடனடியாக மீட்டுக்கொடுக்க வேண்டும் என்று மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

ஆனால் இதுவரையில் சுமார் 42 படகுகள் மட்டுமே மீட்டுக் கொண்டுவரப்பட்டு உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மீதமுள்ள படகுகளில் பெரும்பாலான படகுகள் சேதமடைந்த நிலையில் இருப்பதும் இன்னும் காலம் தாழ்த்தினால் நல்ல நிலையில் உள்ள படகுகளும் சேதமடைந்து பயனற்றதாகப் போய்விடும். இதனையெல்லாம் மத்திய, மாநில அரசுகள் முக்கிய கவனத்தில் கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

எனவே தமிழக அரசு தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் அனைத்தையும்மீட்டுக்கொண்டு வரவும், சேதமடைந்த படகுகளுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத்தரவும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.



குறிப்பாக மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளை மீட்டுக்கொண்டுவரவும், சேதமடைந்த படகுகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தரவும் இலங்கை அரசை கண்டிப்போடு அணுக வேண்டும் என வைகோ வலியுறுத்தியுள்ளார். (இ-7)


# வெள்ளிவிழா நாயகனை

அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

## திரு.செல்லத்துரை உதயகுமார்

(S.L.E.A.S-I, மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்)




கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாய் உதவி, பிரதி, வலய, மாகாணம் கல்விப் பணிப்பாளராய் பணியாற்றிப் பலரது பாராட்டையும் பெற்று வெள்ளி விழாக் காணும் உங்கள் சேவையைப் பாராட்டி தொடர்ந்து சேவைகள் ஒளிமயமாகிட வாழ்த்தி மகிழ்கின்றோம்.

கு.விக்னேஸ்வரன் S.L.P.S-I(குடும்பம்)
ஓய்வுநிலை அதிபர்,
பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.

(C-3127)


# முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ உதவியாளர்சேவையின் தரம் 3 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 2018.07.14 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே 2018.07.11 ஆம் திகதிக்கு பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு, வடமாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் அறிவித்துள்ளார். (இ)

# 134வது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 134 ஆவது பிறந்த நாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சங்க ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க தலைவர் வி.ரி. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மொழியியற்றுறை பேராசிரியர் சுபதினி ரமேஸ், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தா.தியாகமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations



திரு.
க.கலியுகன்
(அதிபர்)



திருமதி.
றோ.அன்ரன் அமலதாஸ்
(செயற்றிட்ட இணைப்பாளர்)



திருமதி.
மோ.முருகானந்தன்
(செயற்றிட்ட உதவி இணைப்பாளர்)

"British Council" மூலம் நடத்தப்பட்ட சர்வதேச பாடசாலை விருது வழங்கலுக்கான ஆங்கில செயற்றிட்டப் போட்டியில் எமது பாடசாலை "Full Award" விருதினைப் பெற்றுக் கொண்டமைக்காக 2018.06.23 அன்று "Hilton Colombo Residences" இல் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்ட அதிபர் மற்றும் செயற்றிட்ட ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
(4368)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L அரச தொழில்<br>தொ.இ: B/7805 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2 ஆம்பாதம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BBA Dip in HR வங்கியாளர்<br>தொ.இ: G/8239 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7808 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4 ஆம் பாதம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:H.N.D.A அரச தொழில்<br>தொ.இ: G/8242 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 1ஆம் பாதம்<br>கி.பா: 35<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: டிப்ளோமா அரச தொழில்<br>தொ.இ: B/7812 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3ஆம்பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:HNDIT BIT அரச தொழில்<br>தொ.இ: G/8244 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:கணனி பட்டதாரி தனியார் தொழில்<br>தொ.இ: B/7813 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4ஆம்பாதம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc கனடா குடியுரிமை அரச உத்தியோகம்<br>தொ.இ: G/8245 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கிலிடு! காமுகனை தூக்கிலிடு! கோரப்படுகொலைக்கு நீதி வேண்டும்











## மாணவி றெஜினாவிற்கு நீதிகோரி மாந்தை கிழக்கில் கவனயீர்ப்பு



யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் 6 வயது சிறுமியான ரெஜினா பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை சீசெய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மாந்தை கிழக்கு அறநெறி பாடசாலைகளின் ஒன்றியத்தினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் பாண்டியன் குளம் எஸ்.ஆர்.சந்தியிலிருந்து ஆரம்பமான இந்த கவனயீர்ப்பு பேரணியானது மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

இதன்போது கவனயீர்ப்பில் கலந்து கொண்டவர்கள் "தூக்கிலிடு! தூக்கிலிடு! காமுகனை தூக்கிலிடு!. அரசே மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து. கோரப்படுகொலைக்கு நீதி வேண்டும் கொலைகாரர்களை தூக்கிலிட வேண்டும். சிறுவர் உரிமைகளை மிதிக்காதே. வெள்ளை உடையில் இரத்தம் சேர்க்காதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் சிவ யோக சுவாமிகள் அறநெறி பாடசாலை இத்தியடி முனீஸ்வரர் அறநெறி பாடசாலை கரும்புள்ளியான் சிவன் கோவில் அறநெறி பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள்,பெற்றோர்கள்,நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# காணாமல்போன இளைஞன் ஒட்டுசுட்டானில் சடலமாக மீட்பு

## சந்தேகத்தின் பேரில் இருவருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் கடந்த மே மாதம் காணாமல் போன இளைஞனின் சடலம் ஒட்டு சுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்து நீதவான் நீதிமன்றில்முற்படுத்தியபோதுஎதிர் வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதவான்உத்தர விட்டார். மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவைச் சேர்ந்த இராஜகோபால் கஜமுகன் (வயது-22) என்ற இளைஞன் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் நெடுங்கேணி கடைக்குச் சென்றிருந்தார். நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் மகனைக் காணவில்லையென தாயார் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் குறித்த இளைஞனின் சடலம் ஒட்டுசுட்டான், தண்ணிமுறிப்பு காட்டுப் பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் கடத்தல் மற்றும் கொலையுடன் தொடர்புபட்டுள்ளதான சந்தேகத்தில் இரு இளைஞர்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளினை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர் வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(2-250)






# வவுனியா வர்த்தக சங்க புதிய நிர்வாகத் தெரிவு



(குருமன்காடு)

வவுனியா வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு பல்வேறு சலசலப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வவுனியா நகரசபை வீதியில் அமைந்துள்ள வாடி வீடு மண்டபத்தில் நடைபெற்றது.

பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இப் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தை மேலும் சிறப்பான வாடிக்கையாளர் சேவை நகராக மாற்றும் திட்டத்துடன் புதிய நிர்வாக தெரிவு இடம் பெற்றது. இதில் இளைஞர்கள் அதிகளவில் ஆதிக்கம் செலுத்தினர்.

இதன்படி சங்கத்தினுடைய புதிய நிர்வாகத்தின் தலைவராக சுஜன் சண்முகராஜா, செயலாளராக ஆறுமுகம் அம்பிகைபாலன், பொருளாளராக நடராசா சுந்தரதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா பிரதேச செயலாளர் , வவுனியா நகரசபை தலைவர் , உப தலைவர், உறுப்பினர்கள் , வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி , வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் , வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர், வவுனியா தனியார் பேருந்து சங்கத்தலைவர், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விநியோகிக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாலிநகர், பாண்டியன் குளம் ஆகிய பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாண்டியன்குளம், பாலிநகர் ஆகிய பகுதிகளில் அதிகளவான மக்கள் சிறுநீரக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே மேற்படி பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை குறைந்த தொகை பணத்திற்கு வழங்கும் வகையில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கி மேற்படி கிராமங்களில் உள்ள கிராம மட்ட அமைப்புக்கள் மூலம் அல்லது ஆலய நிர்வாகம் ஊடாகவோ சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி கோரிக் கைகள் தொடர்பில் பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் இதனை விரைவாக ஏற்படுத்தித் தருமாறும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (2-315)

# பண்டாரிக்குளம் பிரதான வீதி சிரமதானப்பணி மூலம் துப்புரவு





(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் பண்டாரிக்குளம் பிரதான வீதி சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பண்டாரிக்குளம் - உக்கிளாங்குளம் கிராம பொலிஸ் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் குறித்த சிரமதானப் பணி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் அம்மன் கோவில் ஊடான பிரதான வீதியின் இருமருங்கும் பற்றைகளாலும், சிறிய செடிகளாலும் சூழப்பட்டு காணப்பட்டது.

நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் முதல் பலரும் இவ்வீதி வழியாக பயணம் செய்யும் நிலையில் இப் பற்றைகளில் இருந்து நுளம்புத் தொல்லையும் ஏற்பட்டது.

இந்நிலையில் சிரமதானம் ஊடாக குறித்த வீதியின் இருமருங்கும் துப்புரவு செய்யப்பட்டது.

இச்சிரமதானப் பணியில் பண்டாரிக்குளம் கிராம சேவையாளர்,வவுனியா நகரசபை உறுப்பினர் க.சுமந்திரன், பண்டாரிக்குளம்- உக்குளாங்குளம் கிராம பொலிஸ் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள், பண்டாரிக்குளம் அம்மன் கோயில் நிர்வாகத்தினர், தொண்டர்கள் மற்றும் பண்டாரிக்குளம் பொதுமக்கள் உட் பட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மாந்தை கிழக்கில் மாணவர்கள் போராட்டம்





(பனிக்கன்குளம்)

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு மாந்தை கிழக்கு பகுதியில் இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச சபை பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பித்த இந்த கவனயீர்ப்பு பேரணியானது எஸ்.ஆர். சந்தி வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது

போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரம் கடந்த 2018.06.26 முதல் 2018.07.02 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் இறுதிநாளான நேற்று மக்களை விழிப்புணர்வூட்டும் முகமாக இந்த கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது. (2-281)

வன்னி வலம்

## புதையல் தேடும் நவீன கருவி கிளிநொச்சியில் மீட்பு

### சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள பரந்தன் பகுதியில் வீடு ஒன்றில் புதையல் உள்ள இடங்களை அடையாளம் காட்டும் நவீன வசதிகளுடன் கூடிய கருவி ஒன்றை மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஐந்து பேரைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது.



இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள புதையல் உள்ள இடங்களை அடையாளம் காட்டும் நவீன கருவி பல இலட்சம் ரூபா பெறுமதியானது எனவும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதான சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த இரண்டு பேரும் கிளிநொச்சி பளை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் கிளிநொச்சி பரந்தன் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருமாக மொத்தம் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் மூன்று புதையலை இனம் காட்டும் கருவிகள் பொலிஸாராலும் மற்றும் விசேட அதிரடிப் படையினராலும்மீட்கப்பட்டுள்ளன. (2-312-15)

## பாலத்தின் கட்டுமானப் பணிக்கான இரும்புகளை களவாடிய மூவர் கைது!

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத் திற்குட்பட்ட தேவிபுரம் கொலனி பகுதியில் கொழும்பைச் சேர்ந்த ஒப்பந்த நிறுவனம் பாலம் அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் அண்மைய நாட்களாக குறித்த பாலத்தின் கட்டுமானப் பணிக்கு கொண்டு வந்து போடப்பட்ட பாரிய இரும்பு பார்கள் களவாடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடந்த 25 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப் பாட்டில் பாலத்தின் கட்டுமானப்பணிக்கான ஒரு இலட்சத்து 97ஆயிரத்து அறுநூறு ரூபா பெறுமதியான இரும்புகள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் கடந்த 27 ஆம் திகதி தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்படி உடையார் கட்டுப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்துள்ளார்கள்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் மாதம்பே பகுதியைச் சேர்ந்த இரும்பு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் களவாடப்பட்ட மேலும் பல இரும்பு பார்கள் துண்டுகளாக வெட்டப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபர்களின் வீட்டில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

குற்றவாளிகள் கடந்த மாதம் 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதுடன் குறித்த தென்னிலங்கை நிறுவனத்திற்கு அவர்களால் களவாடப்பட்ட சொத்தின் பெறுமதியை செலுத்த இணக்கம் தெரிவித்துள்ளதுடன் குற்றப் பணம் செலுத்தி பிணையில் செல்லுமாறு நீதிபதி பணித்துள்ளார்.

இதற்கமைய அவர்கள் 29 ஆம் திகதி குறித்த சொத்தின் பெறுமதியைக் கட்டி குற்றப் பணத்தையும் கட்டி பிணையில் சென்றுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரி வித்துள்ளனர். (2-281)

## திருட்டில் ஈடுபட முயன்ற மூவர் போலிக்கைத்துப்பாக்கியுடன் கைது

### சொகுசுகார் கைப்பற்று; வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியாவில் சொகுசு கார் மற்றும் போலி கைத் துப்பாக்கியுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா,வாரிக்குட்டியூர் கிராமத்தில் தனவந்தர் ஒருவரின் வீட்டில் நுழைந்த மூவர் கைத்துப்பாக்கியை காட்டி கொள்ளையடிக்க முயற்சித்தாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோனின் உத்தரவுக்கு அமைவாக மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரி மற்றும் சாஜன் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன், அவர்கள் கொள்ளையடிக்க பயன்படுத்தியதாக நம்பப்படும் சொகுசு கார் ஒன்றையும், போலி கைத்துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த தனவந்தரின் வீட்டில் கொள்ளையடிக்கச் சென்றவர்கள் சொகுசு காரில் சென்று கைத்துப்பாக்கியை காட்டி கதவை திறக்குமாறு மிரட்டியுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் கதவைத் திறக்காத காரணத்தால் கொள்ளை முயற்சியை கைவிட்டு மூவரும் தப்பிச் சென்று விட்டனர். வீட்டு உரிமையாளரின் முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ராஜகிரிய, வெல்லம்பிட்டிய மற்றும் மன்னார் பிரதேசங்களை சேர்ந்த 27, 30, 37 வயதுகளையுடைய மூன்று பேரை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கியானது போலியானது என்பதுடன் இவர்கள் மூவரும் பல குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களை பூவரசங்குளம் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (2-250)

## மாடுகளை ஏற்றிச் சென்ற இருவருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஐந்து கள்ளமாடுகளை ஏற்றிச் சென்ற இருவரை கைது செய்துள்ளதுடன் மாடுகளையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

விசுவமடுப் பகுதியில் அண்மையில் ஐந்து மாடுகளை களவாகப் பிடித்து கிளிநொச்சிக்கு வாகனத்தில் கொண்டு சென்றனர். இதன் போது வாகனத்தில் மூவர் சென்றுள்ளதாகவும் ஒருவர் தப்பியோடிய நிலையில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இருவரையும் கடந்த 30 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதன்போது களவாடப்பட்ட ஐந்து மாடுகளும் வாகனமும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் தொடர்பில் ஒத்துழைத்தால் விரைவில் பதில்

## தவிசாளர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு




(கொழும்பு)

எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி காணாமல் போனோர் அலுவலகம் தனது இலக்கினை எட்டும் வரையில் தொடர்ந்து செயற்படும் என காணாமல்போனோர் அலுவலகத்தின் தவிசாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய காணாமல்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டு அதற்கு சட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளமை அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்ப்பதாகவே காணப்படுகின்றது.

இந் நிலையில் காணாமல்போனோர் அலுவலகம் தனது இலக்கினை எட்டும் வரையில் தொடர்ந்து செயற்படும். எவ்வித அரசியல் மற்றும் எந்தத் தரப்பினருக்கும் தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் அலுவலகத்தின் செயற்பாடுகள் அமையாது.

அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி காணாமல் போனோர் அலுவலகத்தின் மக்கள் சந்திப்பு கிளிநொச்சி பிரதேசத்தில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினால் விரைவில் அனைத்து கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ATM இயந்திரத்திலிருந்த 35 இலட்சம் ரூபா மாயம்

(கொழும்பு)

கல்கிஸ்சையிலுள்ள ATM இயந்திரத்தில் பெருந்தொகை பணம் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்கிசை ஹோட்டல் வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கிக்குச் சொந்தமான ATM இயந்திரத்தில் 37 இலட்சம் ரூபாய் பணம் காணாமல் போயுள்ளதாக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வங்கியின் கொழும்பிலுள்ள அலுவலகத்தினால் இந்த ATM இயந் திரம் நிர்வகிக்கப்படுகின்றது. அதில் பணம் வைப்பிடும் நடவடிக்கையினை தனியார் வங்கி ஒன்றினால் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் குறித்த தனியார் வங்கியின் பிரதான அலுவலகத்தில் பணம் கணக்கிடும் போது 35 இலட்சம் ரூபாய் பணம் குறைவடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு பணம் காணாமல்போன இயந்திரத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த இயந்திரத்தின் கதவுகளை திறக்கும் அனைத்து தொழில்நுட்பமும் தனியார் வங்கியினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு மாத்திரமே உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## 284 மண்சரிவு வலயங்களிலுள்ள மக்களை குடியமர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 284 வலயங்களை சேர்ந்த மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளின் போது 10 மாவட்டங்களில் 284 மண்சரிவு வலயங்கள் இனங் காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிரதேச செயலகர்கள் ஊடாக அதிக அவதானத்துக்குள்ளான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கு தேவையான நிலங்கள் குறித்து, தேசிய கட்டட ஆய்வு மையத்துக்கு அறிவித்ததன் பின்னர் அதன் அதிகாரிகளால் நிலம் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்.

பின்னர் ஆய்வு மையத்தால் தயாரிக்கப்படும் ஆவணங்கள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பப்படுமெனகுறித்த மையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## தொண்டராசியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சில் இறுதியாக நடைபெற்ற நேர்முகத் தேர்வுகளில்பங்குபற்றியஅனைத்து யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களையும் நாளை புதன்கிழமை 04.07.2018 காலை 9.30 மணிக்கு ஆரிய குளம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறும் நியமனத்தை விரைந்து பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடவிருப்பதாலும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் யோ. அருட்செல்வம் அறிவித்துள்ளார். (இ)

## கடத்தல் நாடகமாடிய 15 வயது மாணவி கைது

(கொழும்பு)

காதலனுடன் இணைந்து, கோடீஸ்வரத் தந்தையிடம், 10 மில்லியன் ரூபாய் கப்பம் பெறுவதற்காக, தான் கடத்தப்பட்டுள்ளதாக நாடகமாடிய 15 வயதுப் பாடசாலை மாணவியும் அவரது காதலனும், நீர்கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும், ஏற்கனவே திட்டமிட்டபடி, கடந்த வியாழக்கிழமையன்று மதியம், நீர்கொழும்பு - ஏத்துக்கால பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

அங்கிருந்தவாறு மாணவியின் தொலைபேசியூடாக, மாணவியின் தாயாருக்கு அழைப்பை எடுத்துள்ள காதலன், மகள் கடத்தப்பட்டுள்ளதாகவும் விடுவிக்க வேண்டுமாயின், 10 மில்லியன் ரூபாய் கப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, மாணவியின் பெற்றோர், இதுதொடர்பாக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கிடையில், கப்பத்தொகையை ஒரு மில்லியன் வரை குறைப்பதற்கு சந்தேகநபர் தொலைபேசியூடாக இணங்கியுள்ளார்.

இந்நிலையில், கடத்தப்பட்டதாக கூறப்பட்ட மாணவி, கட்டானை - படபத்தல பிரதேசத்தில் கைவிடப்பட்டுச் செல்லப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலொன்றை அடுத்து, கடந்த வெள்ளிக்கிழமையன்று மாணவி மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கலப்பதி, மேலதிக விசாரணை மேற்கொள்வதற்காக பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவினையும் விசாரணைக்கு இணைத்துள்ளார்.

பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார், மாணவியிடம் மீண்டும் விசாரணை செய்ததோடு, மாணவியின் அலைபேசி தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர்.

மாணவி அதிகமாகத் தொடர்புகொண்ட நபர் தொடர்பாக வினவியபோது, அது மாணவியின் காதலரெனத் தெரியவந்துள்ளது. பின்னர் பொலிஸார், சந்தேகநபரான மாணவியின் காதலனைக் கைதுசெய்து விசாரணை செய்தனர்இதன்போது, மாணவியின் (காதலியின்) தந்தையிடம் 10 மில்லியன் ரூபாயைக் கப்பமாகப் பெறுவதற்காக, இந்த கடத்தல் நாடகத்தை ஆடியதாகவும் தனது தந்தையின் மோட்டார் சைக்கிளில், மாணவியை ஏற்றிச்சென்று, கட்டானை பிரதேசத்தில் அவரை இறக்கிவிட்டதாகவும், சந்தேகநபர் வாக்குமூலமளித்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேகநபர்களை நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, பிரதான சந்தேகநபரை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் மாணவியை, அவரது பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும், நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

## பொதுஜன பெரமுனவில் இணையத் தயாரில்லை

### —தயாசிறி ஜெயசேகர—



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ள எந்த வகையிலும் தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணையுமாறு எப்படியான அழுத்தங்களை கொடுத்தாலும் அதற்கு அடிபணியப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

குருநாகல் பிங்கிரிய தொகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டத்தில் பேசும் போதே தயாசிறி ஜெயசேகர இதனைத் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள எவரும் இதுவரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளவில்லை. இந் நிலையில் தமது அணியினரை மாத்திரம் அந்தக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு கோருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தேன் எடுக்கச் சென்றவர் காட்டு யானை தாக்கி ஸ்தலத்திலேயே பலி!

(ஏறாவூர்)

வாகரை கட்டுமுறிவு வனாந்தரப் பகுதியில் தேன் எடுக்கச் சென்றவர் காட்டு யானையால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக வாகரைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.என்.ஐ. திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கட்டுமுறிவு வாசியான ஒரு பிள்ளையின் தந்தை வேலன் நவரெட்ணம் (வயது-29) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தற்போது [illegible] காலை வேளையில் தேன் எடுக்கும் நோக்கத்துடன் கட்டுமுறிவுக் குளம் வனப் பகுதியை அடைந்தபோது அங்கே மறைந்திருந்த காட்டு யானை இவரை எதிர்கொண்டு மூர்க்கமாகத் தாக்கியுள்ளது.

சம்பவத்தில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

பொழுது புலர்ந்ததும் காட்டு யானைக் கூட்டம் அவ்விடத்திலிருந்து நகர்ந்தவுடனேயே உதவிக்கு விரைந்தோரால் தாக்குதலுக்குள்ளானவரை நெருங்க முடிந்திருக்கிறது என்று கட்டு முறிவு விவசாய அமைப்பின் செயலாளர் [illegible] குலசிங்கம் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளைத் தவிர்க்க காலணிகளில் கவனம் செலுத்துங்கள்



பாதங்கள்தான் ஒட்டுமொத்த உடலையும் தாங்கும் அத்திபாரம். பாதங்களில் பிரச்சினை வந்தால் உடல் ஆட்டம் கண்டுவிடும். நிற்கவோ, நடக்கவோ முடியாமல் ஒரே இடத்தில் முடங்கிவிடுவோம். பாதங்களில் பாதிப்பு ஏற்பட நாம் அணியும் காலணிகளும்கூடக் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் மருத்துவர்கள். "பொருத்தமற்ற காலணிகளை அணிவதால், கால்கள் மட்டுமல்லாமல் பாதங்களில் உள்ள நரம்புகளும் பாதிக்கப்படும். முக்கியமாக முதுகுவலிப் பிரச்சினைக்கும் வழிவகுக்கும்" என்கிறார் நியூரோ பிசியோதெரபிஸ்ட் ஃபமிதா. விரிவாகப் பார்ப்போம்.

## சியாட்டிகா (Sciatica)

சியாட்டிகா என்பது ஒருவித அடிப்புற இடுப்புவலி. குதிகால் உயர்ந்த காலணிகளை அணிவதே இதற்கு முக்கிய காரணம். இந்தப் பிரச்சினை பாதம் முதல் தொடை, இடுப்பு மற்றும் பின்புறம் வரை கடுமையான வலியை ஏற்படுத்தும் கால்கள் மரத்துப் போகும். நடக்கும் போதும் குனியும்போதும் வலி அதிகமாக உணரப்படும்.

## தட்டைப்பாதங்கள் (Flat Feet)

முன் பாதத்துக்கும் குதிகாலுக்கும் இடையே 'ஆர்ச்' (Arch) போன்ற இடைவெளி இல்லாமல் தட்டையாக இருப்பதை 'தட்டைப் பாதம்' என்பார்கள். இது பெரும்பாலும், குழந்தைப் பருவத்திலேயே ஏற்படுகிறது. அதற்கேற்ப ஷூ அணியாவிட்டால் சிலருக்குப் பாதத்தின் "ஆர்ச்" பகுதியிலும் குதிகால்களிலும் வலி ஏற்படும்.

நாளடைவில் நிற்பது, நடப்பது போன்ற நிலைகளிலும் மாற்றம் ஏற்பட்டு, அது கால் மூட்டு, இடுப்பு, பின்புறப் பகுதி, முதுகு ஆகியவற்றிலும் வலியை உண்டாக்கும். பாதங்களின் 'ஆர்ச்' எப்படி இருக்கிறதோ அதற்கேற்ற காலணிகளை அணிய வேண்டும்.

## குதிகால் வலி (Achilles Tendinopathy)

குதித்து விளையாடும் வகையிலான செயற்பாடுகளால் சிலருக்குக் குதிகால் மற்றும் கெண்டைக்கால் தசையில் வலி, வீக்கம், கணுக்காலில் தசை இறுக்கம் உண்டாகும். பெரும்பாலும் நடனக் கலைஞர்கள், டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்கு இந்த வகைப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொருத்தமற்ற காலணிகளை அணிவதே முக்கிய காரணமாகும். வலியை உணர்பவர்கள் குதிகால்களுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டினை நிறுத்த வேண்டும். கால்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி வலி நிவாரண மருந்துகளை எடுத்துக்கொண்டு நிவாரணம் பெறலாம்.

## பி.டி.டி.டி என்னும் 'போஸ்டீரியர் டிபியல் டெண்டன் டிஸ்/பங்ஷன்' (Posterior Tibial Tendon Dysfunction)

கடினமான உடற்பயிற்சி மேற்கொள்வது, விளையாட்டுகளால் பாதங்களில் காயம் ஏற்படுவது, தட்டைப்பாதங்கள் இருப்பது போன்றவை பி.டி.டி.டி என்னும் பிரச்சினைக்கு வழிவகுக்கும். இத்தகைய சூழலில் கால்களை அசைக்க முடியாது. ஆரம்பத்தில் பாதத்தில் வலி, சிவந்துபோதல், வீக்கம் காணப்பட்டுக் கடைசியில் அது தட்டைப்பாதமாக மாறிவிடும். இதை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் மாத்திரை, மருந்துகள், சிலவகை தெரபி மற்றும் பாதங்களின் 'ஆர்ச்'சுக்கேற்ற காலணிகளை அணிவதன்மூலம் தீர்வு காணலாம். இப்பிரச்சினை தொடர்ந்தால், அறுவைசிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

## காலணிகள் தேர்வில் கவனம் இருக்கட்டும்

- காலணிகளின் உள்பகுதி பஞ்சு போன்று மிருதுவாக இருக்க வேண்டும். அதிக எடையும் அழுத்தமும் இல்லாமல் இருக்க வேண்டும்.
- இரண்டு அங்குலத்துக்கு மேல் அதிக உயரமுள்ள காலணிகளை (ஹை ஹீல்ஸ்) அணியக் கூடாது.
- குறுகலான அளவுள்ள (Narrow Shoes) ஷூக்களை அணியக் கூடாது.
- தரையில் வழுக்காத செருப்புகளையே பயன்படுத்த வேண்டும்.
- தோல் செருப்புகளும் ஷூக்களுமே சிறந்தவை. பிளாஸ்டிக் செருப்புகளைத் தவிர்க்க வேண்டும்.
- நீரிழிவுநோய் இருந்தால் மருத்துவரின் ஆலோசனைப்படி காலணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

# விபத்தில் சிறுவன் பலி! மேலும் இருவர் படுகாயம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி - பழுகாமம் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் தும்பங்கேணி - பழுகாமம் சந்தியில் டிப்பர் வாகனம் ஆட்டோவுடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலாச்சோலையில் இருந்து களுவாஞ்சிகுடிக்கு சென்ற ஆட்டோவுடன் சம்மாந்துறையில் இருந்து கொக்கட்டிச்சோலைக்கு சென்ற டிப்பர் வாகனம் மோதி பின்னர் ஆட்டோ பாதையில் இழுத்துச் செல்லப்பட்டதாக சம்பவத்தினை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த ஆட்டோவில் பயணித்த இரண்டு வயது சிறுவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், சிறுவனின் தாயாரும் ஆட்டோச்சாரதியும் படுகாயமடைந்துள்ளதாகவும் வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், படுகாயமடைந்தவர்களும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு வாகனங்களினதும் வேகமே குறித்த விபத்துக்கு காரணம் என தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# இன்னும் இருப்பது ஒன்றரை ஆண்டுகள்தான் அதுவரை பொறுமையாக இருங்கள்-பொன்சேகா



(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து யானை வேலிகளையும் ஒன்றரை ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க எதிர்பார்ப்பதாக வனஜீவராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்கு மேலும் சேவை செய்ய இன்னும் ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே இருப்பதாகவும் அதில் ஒரு வருடத்திற்குள் யானை வேலிகளை செய்து முடிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனால் அவற்றை நிறைவேற்றும் வரை மக்கள் பொறுமையாக இருக்குமாறு அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரையில் 4500 கிலோ மீற்றர் வரையான யானை வேலிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த வேலிகளை கொண்டு இலங்கையை இரண்டு மூன்று முறை சுற்ற முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் மேலும் 2500 கிலோ மீற்றர் அளவான யானை வேலிகள் அமைக்க வேண்டும் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த கோரிக்கையை மேற்கொள்ள நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அதிபர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ்.வலயத்தில் கடமையாற்றும் அதிபர்சேவையை சேர்ந்தவர்களிடமிருந்தே வகை-II, வகை-III பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபந்தனைகள்

வகை-II, பாடசாலைகளுக்கு வகுப்பு 2ஐச் சேர்ந்த அதிபர்களும் [illegible] [illegible] சேர்ந்த அதிபர்களும் விண்ணப்பிக்கலாம்.

வகைIII, பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்த அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள் விண்ணப்பிக்க முடியும்.

1.யா/புனித றோக்ஸ் வித்தியாலயம்-வகை-II

2.யா/நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை வகை-III

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருப்பதுடன் தற்போது அதிபராக கடமையாற்றுபவர்கள் அதே பாடசாலையில் மூன்று வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பப்படிவங்களை யாழ். கல்வி வலயத்தில் பொது நிர்வாகக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 17.07.2018 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் சு.சுந்தரசிவம் கேட்டுக்கொண்டுள்ளார்.(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க நினைப்பது ஒருபோதும் நடக்காது

## முதலமைச்சர் பழனிச்சாமி திடம்



(கிருஷ்ணகிரி)

எதிர்க்கட்சியினர் தேவை யில்லாத போராட்டங்களை உருவாக்கி அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க நினைப்பது ஒருபோதும் நடக்காது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 70ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 90 ஜோடிகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கும் நிகழ்ச்சி கிருஷ்ணகிரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த திருமணங்களை ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் தலைமை தாங்கி நடத்தி வைத்தனர்.

மணமக்களை வாழ்த்தி முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி உரையாற்றுகையில்,

தமிழகத்திலே ஓராண்டில் 31 ஆயிரத்துக்கும் அதிகமான போராட்டங்களை அ.தி.மு.க. அரசு எதிர்கொண்டிருக்கின்றது. அத்தனையையும் நீர்த்துப் போகச் செய்திருக்கின்றோம். அதற்குக் காரணம், இங்கே வந்திருக்கின்ற நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஒத்துழைப்புதான். ஆட்சி வலிமை மிக்கதாக இருக்கின்றது.

ஒரு கட்டடத்தினுடைய வலு, அதன் அஸ்திவாரம் போல் இருக்கும். ஒரு கட்சி வலிமையாக இருக்க வேண்டும் என்று சொன்னால், தொண்டர்கள் வலிமையாக இருக்க வேண்டும். இப்பொழுது இந்தத் தொண்டர்கள் வலிமையாக இருக்கின்ற காரணத்தினாலே, ஆட்சி வலிமையாக இருக்கிறது.

அத்தனை போராட்டங்களையும் முறியடிக்கின்ற வல்லமை மிக்கது அ.தி.மு.க. அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நாம் பல்வேறு திட்டங்களை தமிழகத்திலே கொண்டு வந்து கொண்டிருக்கின்றோம். ஒரு மாநிலம் வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், திட்டங்கள் நிறை வேற்றப்பட வேண்டும். ஆனால், அந்த வளர்ச்சி அடையக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு, அதை முடக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அண்மையிலே ஒரு செய்தி, பசுமை வழிச்சாலை, ஏதோ சேலத்திற்கு மட்டும் அந்த வீதி போடுகிற மாதிரி ஒரு தோற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அரசியல் ரீதியாக அ.தி.மு.க.வையும் வீழ்த்த முடியாது. ஆட்சியையும் வீழ்த்தமுடியாது. அதனால்தான், இந்த வளர்ச்சித் திட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பசுமை வழிச்சாலை, இந்தியாவிலே 2-வது திட்டம், தொழில்நுட்பத்துடன், அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு விபத்தில்லாத வீதியை உருவாக்குவதற்காக மத்திய அரசு ரூ.10 ஆயிரம் கோடியில் இந்த பசுமை வழிச்சாலை திட்டத்தை தமிழகத்தில் அறிவித்திருக்கின்றார்கள்.

அது சேலத்தின் வழியாக, பல்வேறு மாவட்டங்களுக்கும் செல்கின்றது. புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாக வேண்டிய பகுதி இந்தப் பகுதி. அப்படி புதிய புதிய தொழிற்சாலைகள் உருவானால், இலட்சக் கணக்கான மாணவர்கள் படித்து வேலைக்குச் செல்ல முடியும்.

படித்துவிட்டு வரும் இளைஞர்களுக்கு தேவையான வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவது அரசினுடைய கடமை. அதற்குத் தகுந்த தேவையான திட்டங்களை தமிழகத்திலே வகுத்துக் கொடுக்க வேண்டும். அந்த வழியிலே தான், இந்த பசுமை வழிச்சாலை ஏற்படுத்தப்படுகிறது.

இதனால் புதிய தொழிற்சாலைகள் வருகின்ற சூழல் ஏற்படும், அப்பொழுது இந்தப் பகுதி வளர்ச்சி பெறும். இந்த வீதி மூலமாக சென்னைக்கு செல்வதற்கு சுமார் 60 கிலோ மீற்றர் தூரம் குறையும், இதன்மூலம் எரிபொருள் மிச்சமாகிறது.

இதன் மூலம் பொருளாதார சேமிப்பு ஏற்படும், வீதி விபத்துக்களும் குறையும். இத்தனையையும் உள்ளடக்கித்தான் அந்த நவீனவீதி அமைக்கப்படுகிறது.

இன்றைக்கு சில பேர் பேசுகிறார்கள், 40 சதவீதம் கமிஷன் கிடைப்பதற்குத்தான் இந்த 10 ஆயிரம் கோடி ரூபாயை செலவு செய்கிறோம் என்று. என்ன விபரத்தை வைத்து சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை. மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் வருகின்ற திட்டம் இது. இந்த திட்டத்தில், மாநில அரசு இவ்வளவு கமிஷன் பெறுகிறது என்று சொன்னால், எவ்வளவு பச்சைப் பொய் என்பதை எண்ணிப் பாருங்கள்.

பசுமை வழிச்சாலை அமைப்பதன் மூலமாக உயிரிழப்பை தடுக்க முடியும், பயண நேரத்தை குறைக்க முடியும், எரிபொருள் செலவு குறைக்கப்படும், தேய்மானம் குறையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அ.தி.மு.க. அரசின் சாதனைகளை பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்க்கட்சியினர், தேவையில்லாமல் போராட்டங்களை உருவாக்கி, இந்த அரசிற்கு ஒரு நெருக்கடியை உருவாக்கி, இந்த ஆட்சியை கவிழ்க்கப் பார்க்கின்றார்கள், ஒரு போதும் நடக்காது. இங்கே வருகை தந்திருக்கின்ற மக்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் இருக்கின்ற வரை அ.தி.மு.கவையும் வீழ்த்த முடியாது, இந்த அரசையும் கவிழ்க்க முடியாது என எடப்பாடி பழனிச்சாமி மேலும் தெரிவித்தார். (இ)

# வர்த்தகப் போருக்கு உலகநாடுகள் உடன் தீர்வுகாண வேண்டும்

உலகின் பெரிய நாடுகள் பரஸ்பரம் காப்பு வரிகளை உயர்த்தி விதிப்பதன் மூலம் வர்த்தகப் போரைத் தொடங்கியிருப்பது ஆபத்தான போக்காகும். உலக வர்த்தகம் சுருங்கி, அனைத்து நாடுகளிலும் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட இது வழிவகுக்கும். வேலையில்லாத் திண்டாட்டமும் பண்டங்களுக்குப் பற்றாக்குறையும் அதிகரிக்கும். பதிலுக்குப்பதில் காப்புவரி என்று அமெரிக்கா மீதே அதைத்திருப்பினாலும் ஒட்டுமொத்தமாக அனைவருக்கும்தான் பாதிப்பு ஏற்படும். விதிகளின்படியே வர்த்தகம் செய்யலாம் என்று ஜி-7 நாடுகளின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்ததை ஏற்க ட்ரம்ப் மறுத்துவிட்டார். இப்போதைக்கு சமரசத்துக்குத் தயார் இல்லை என்றும் உணர்த்தியிருக்கிறார்.

சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்கள் மீது 20,000 கோடி டொலர் புதிய வரி விதிக்குமாறு அரசு நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருப்பதாக அண்மையில் ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

அமெரிக்கப் பொருட்கள் மீது சீனா விதித்த 5,000 கோடி டொலர்கள் காப்பு வரிக்கு இது பதிலடியாகும். அதேசமயம், இந்தக் காப்பு வரிச் சண்டையில் முதல் நடவடிக்கையை எடுத்தது அமெரிக்காதான்.

பிற நாடுகளிலிருந்து உருக்கும் அலுமினியமும் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கக் காப்பு வரி விதிக்கப்படும் என்று கடந்த மார்ச்சில் அது அறிவித்தது. அமெரிக்கா இப்போது புதிதாக அறிவித்துள்ள இறக்குமதி வரி, அளவில் பெரியது. 45,000 கோடி டொலர்கள் மதிப்புள்ள சீனப் பொருட்கள் இதுவரை வரிவிதிப்புக்கு உள்ளாகியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியமும் இந்த காப்பு வரிப் போரில் இறங்கியிருக்கிறது.

இந்தியாவின் உருக்கு, அலுமினியம் மீது அமெரிக்கா விதித்துள்ள காப்பு வரியால் இந்தியாவுக்கு 24 கோடியே 10 இலட்சம் டொலர்கள் மதிப்புக்கு இழப்பு என்பதை உலக வர்த்தக அமைப்பிடம் இந்தியா சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினையை இப்படியே வரி எதிர் வரி என்று போகாமல் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கே விரும்புவதாகத் தெரிவித்திருந்தது.

இப்படி ஒரு வர்த்தகப் போர் வராது என்றே நினைத்து உலக நிதிச் சந்தை அலட்சியமாக இருந்தது. ஆனால், நிலைமை கைமீறிக்கொண்டிருக்கிறது. டௌஜோன்ஸ் தொழில்துறை சராசரி கடந்த செவ்வாய்க்கிழமை 1.6வீதம் சரிந்தது. ஷென்ஷன் ஒட்டுமொத்த குறியீட்டெண் 5.8வீதம் சரிந்தது. இந்த வர்த்தகப் போர் மோசமாகிவிடும் என்று நிதிச்சந்தை முதலீட்டாளர்கள் அஞ்சுவதையே இது காட்டுகிறது.

அமெரிக்காவின் உருக்குத் தொழில் போன்ற சில பிரிவுகளுக்கு வேண்டுமானால் இந்தக் காப்பு வரி சாதகமாக இருக்கலாம். ஆனால், வர்த்தகப் போரில் இறங்கும் எல்லா நாடுகளுக்குமே வருவாய் இழப்புதான் ஏற்படும். நிலைமை மோசமடைவதற்கு முன்னால் உலகின் முன்னணி நாடுகள் இணைந்து சமரசத்தை ஏற்படுத்த வேண்டும்!

த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்

# ஈரானை த... சவுதியூடா...

## கூடுதல் கச்சா எ...

(வோஷிங்டன்)

கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் இருந்து ஈரானை அகற்ற துடித்து வரும் அமெரிக்கா, சவுதி அரேபியா மூலம் காய்நகர்த்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக, கூடுதலாக கச்சா எண்ணெய் உற்பத்தி செய்து விநியோகம் செய்யுமாறு சவுதி அரேபியாவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.

கச்சா எண்ணெயை அதிக அள வில் இறக்குமதி செய்யும் நாடுகளில் மூன்றாவது இடத்தில் இந்தியா இருக்கிறது. ஈராக், சவுதி அரேபியாவை தொடர்ந்து இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் அனுப்பும் 3வது பெரிய நாடு ஈரானாகும். இந்த நிலையில், ஈரான் உடனான அணு ஒப்ப



ந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்தது.

அதன் பிறகு உலக அளவில் ஈரானை தனிமைப்படுத்தும் வேலைகளை அமெரிக்கா செய்து வருகிறது. ஈரான் ஒரு நாளைக்கு 24 இலட்சம் பரல் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்கிறது.

ஈரான் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதார தடைகளை விதிக்கும் என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதனால் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெயை பிற நாடுகள் வாங்கு

# ஹெலிகொப்டரை பய... சிறையிலிருந்து தப்பி...

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள சிறையொன்றிலிருந்து 25 வருட சிறைத்தண்டனை அனுபவித்த ஆபத்தான குற்றவாளியொருவர் ஹெலிகொப்டரை பயன்படுத்தி தப்பிச்சென்றுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரெடொய்ன் பைட் என்ற நபரே இவ்வாறு சிறையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபர் பாரிய கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்டமைக்காக 25 வருடசிறைத்தண்டனை அனுபவித்து வந்தவர் என்பது குறிப்பிடத்

# பாகிஸ்தான் சிறைகளில் 471 இந்தியர்கள் இந்தியத்தூதரகத்திடம் பட்டியல் வழங்கல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறைகளிலுள்ள இந்தியர்கள் 471 பேரின் பட்டியலை அந்த நாட்டு அரசு இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதரகத்திடம் நேற்றுமுன்தினம் வழங்கியது.

இந்திய சிறைகளில் உள்ள பாகிஸ்தானியர்கள் பற்றிய விபரங்களையும், பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்தியர்கள் பற்றிய விபரங்களையும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதியும் ஜூலை முதலாம் திகதியும் பகிர்ந்து கொள்வது என இரு நாடுகளும் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

அதன்படி, பாகிஸ்தான் சிறைகளிலுள்ள இந்தியர்கள் 471பேரின் பட்டியலை அந்த நாட்டு அரசு இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்திடம் நேற்று முன்தினம் வழங்கியது. இந்த 471 பேரில் 418 பேர் மீனவர்கள் ஆவார்கள். பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக சென்றதாக கூறி இவர்கள் கைது செய்யப்பட்டு அங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ...னிமைப்படுத்துவதற்கு ...க அமெரிக்கா திட்டம்

### ...ணெய் உற்பத்திக்கு அறிவுறுத்தல்

...வதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் ட்ரம்ப் எடுத்து வருகிறார். ஈரானின் கச்சா எண்ணெய் உற்பத்தி முன்பைவிடக் குறைந்து கச்சா எண்ணெய்க்கான தேவை அதிகரித்துள்ளது. தேவை அதிகரிப்பின் விளைவாக விலையும் அதிகரித்துள்ளது.

ஈரானிடம் அதிகளவு கச்சா எண்ணெய் வாங்கும் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அமெரிக்கா நேரடியாகவே மிரட்டல் விடுத்துள்ளது. ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் வாங்கினால் சம்பந்தப்பட்ட நாடுகளுடனான வர்த்தக உறவுகளை துண்டிப்போம் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது. இதனால் உலக அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பதுடன், இந்தியா உள்ளிட்ட



நாடுகளுக்கு தேவையான கச்சா எண்ணெய் கிடைக்காத் சூழல் உள்ளது.

இதையடுத்து உலக அளவில் ஈரானை தனிமைப்படுத்த அமெரிக்கா புதிய வியூகம் வகுத்துள்ளது. அத...டி கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும்படி சவுதி அரேபியாவை ட்ரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார். ஈரானின் போட்டி நாடாக விளங்கும் சவுதி அரேபியா, அமெரிக்காவுடன் நட்பு பாராட்டி வருகிறது.

உலகளவில் அதிகமான அளவு கச்சா எண்ணெயை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வரும் நாடாக சவுதி அரேபியா விளங்குகி றது. எனவே சவுதி கச்சா எண் ணெயை மற்ற நாடுகளை வாங்க வைப்பதன் மூலம் ஈரானை தனிமைப்படுத்த முடியும் என ட்ரம்ப் நம்பு கிறார்.


இது தொடர்பாக சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீசை, ஜனாதிபதி ட்ரம்ப் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, அவர் சவுதியின் கச்சா எண்ணெய் வர்த்தகத்தை அதிகரிக்கவும், சர்வதேச எண்ணெய் சந்தையில்நிலைத்தன்மையை பாதுகாக்கவும் கூடுதலாக உற்பத்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். சவுதி அரேபியா, நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் பரல்கள் வரை எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸ், தேவைப்பட்டால் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க தயாராக இருப்பதாக உறுதி அளித்துள்ளார். (இ)

## ...ன்படுத்தி ...ய கைதி

...நபர்கள் மற்றொருநபரை பணயக்கைதியாக பிடித்துச்சென்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவத்தை தொடர்ந்து பிரான்ஸ் தலைநகர் முழுவதும் தேடுதல் நட...



...தக்கது.

ஆயுதங்களுடன் வந்த சிலர் சிறைச்சாலை வாசலில் குழப்பத்தை ஏற்படுத்தியதாகவும் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய கைதி ஹெலிகொப்டர் மூலம் தப்பிச்சென்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையின் பின்பகுதி ஊடாக எவருக்கும் காயம் ஏற்படுத்தாமல் கைதியும் அவரது சகாக்களும் தப்பிச்சென்றுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆயுதமேந்திய ... வடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதி தப்பிச்செல்வதற்கு பயன்படுத்திய ஹெலிகொப்டரை மீட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கைதி 2013ஆம் ஆண்டு ஏற்கனவே சிறையிலிருந்து தப்பிய பின்னர் கைது செய்யப்பட்டவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## ஆஸியில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு




(கன்பெரா)

அவுஸ்திரேலிய நாட்டில் பாடசாலை, பணியிடங்களில் பாலியல்வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 60 ஆயிரம் பேருக்கு இழப்பீடாக பணம் வழங்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

அவுஸ்திரேலிய நாட்டில் பாடசாலை, பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆண் - பெண்களுக்கு இழப்பீடாக பணம்வழங்கும் திட்டத்துக்கு அந்நாட்டு சமூக நலத்துறை அமைச்சகம் அண்மையில் ஒப்புதலளித்தது.

பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்யும் வகையில் தனி அமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு, விசாரணை நடைபெற்று வந்தது. இந்த விசாரணை முகாமையின் பரிந்துரையின் பேரில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானவர்களுக்கு சுமார் 67 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களும், அதிகபட்ச தொகையாக ஒன்றரை இலட்சம் டொலர்களும் இழப்பீடாக வழங்க அரசு தீர்மானித்தது.

இதற்கான நிதியை அந்நாட்டின் பல்வேறு மாநில அரசுகளும், கத்தோலிக்க தேவாலயங்களும் அளிக்க முன்வந்துள்ளன.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் மனக்காயங்களை



ஆற்றும் மகத்தான திட்டம் என அவுஸ்திரேலிய பிரதமர் மால்கோம் டர்ன்புல் குறிப்பிட்டுள்ள இந்த திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு நிதியளிக்கும்பணிகள்தொடங்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் நேற்று தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ் பணம் பெற்றுக்கொள்பவர்கள் தங்களைக் கொடுமைப்படுத்தியவர்கள் மீது இனி வழக்கு ஏதும் தொடர முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்விடத்தில் தற்கொலைப்படைத் தாக்குதலால் ஆப்கானில் 20 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜலாலாபாத் நகரில் இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்கு பகுதியிலுள்ள நன்கர்ஹர் மாகாணத்தின் தலைநகரான ஜலாலாபாத் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசு நிகழ்ச்சியில் ஜனாதிபதி அஷ்ரப் கனி பங்கேற்றார்.



அந்த நிகழ்ச்சி முடிந்து அவர் புறப்பட்டு சென்றவுடன் முக்காபெரட் சதுக்கம் பகுதியில்நடைபெற்ற தற்கொலைப் படை தாக்குதலில் இந்துக்கள், சீக்கியர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்ததாக முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், தற்கொலைப்படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது எனவும் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

சீக்கியர்கள் மற்றும் இந்துக்களை குறிவைத்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இதற்கிடையே, ஆப்கானிஸ்தானில் சீக்கியர்கள், இந்துக்களை குறிவைத்து நடைபெற்ற தற்கொலைப் படை தாக்குதலுக்கு பஞ்சாப் முதலமைச்சர் அமரிந்தர் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ)

## துருக்கி விமானப்படைத் தாக்குதலில் 10 குர்திஷ் போராளிகள் உயிரிழப்பு

(இஸ்தான்புல்)

ஈராக் நாட்டின் வடபகுதி மற்றும் துருக்கி நாட்டின் தென்கிழக்கு மாகாணங்களில் துருக்கிவிமானப்படை நடத்திய தாக்குதலில் குர்திஷ் போராளிகள் 10 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கிலுள்ள குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சி எனும்அமைப்பை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள்பயங்கரவாத அமைப் பாக அறிவித்துள்ளன. பெரும்பாலும் ஈராக்கின் வடக்கு



பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் குர்திஷ்தான் பயங்கரவாதிகள், கான்டில் மலைப் பகுதியில் முகாம்களை அமைத்துள்ளனர்.

இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் பயங்கரவாதத் தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர். இவர்களை அழிக்கும் பணியில் துருக்கி நாட்டின் விமானப் படைகள் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், ஈராக்கின் வடக்கு பகுதியில் உள்ள சாப் மாகாணம் மற்றும் துருக்கியின் தென்கிழக்கு பகுதியில் உள்ள சிர்னாக் மற்றும் வான் பகுதிகளில் துருக்கி விமானப் படை நடத்திய தாக்குதலில் குர்திஷ் போராளிகள் 10 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் கூட இல்லாத ஊடக சுதந்திரம் இலங்கையில்

## அமைச்சர் மங்கள பெருமிதம்

(கொழும்பு)

ராஜபக்ஷ ஆட்சியைப் போன்று, பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பில் இருந்த வேறு எந்த ஆட்சியையும் வரலாற்றில் காண முடியாது என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாத்தறை சம்பவத்தில் கிடைக்கப்பெற்ற ஆயுதங்கள் பிரபல அரசியல்வாதி ஒரு வருடையது என பரவும் செய்திக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், தனக்கு ஆயுதங்களுடன் எவ்வித கணக்கு வழக்குகளும் இல்லை என நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் தெரிவித்துக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் கூட இல்லாத ஊடக சுதந்திரம் இன்று இலங்கையில் இருப்பதாகவும் அமைச்சர் மங்கள தெரிவித்துள்ளார். (இ)

# அடுத்த வருட இறுதிக்குள் 200 பில்லியன் ரூபாவில் அபிவிருத்தித் திட்டங்கள்

(கொழும்பு)

நாட்டில் துரிதகதியில் அபிவிருத்தி நடவடிக்கை களை முன்னெடுக்க தாம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த வருட இறுதிக்குள் 160 முதல் 200 பில்லியன் ரூபா வரை பெறுமதி கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வரும் மூன்று, நான்கு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் கணிசமான வளர்ச்சியடையும் என்றும் அதன் பின்னர் நாட்டு மக்களுக்கு விசேட சலுகைகளும் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டி, பன்னில, கெலேபொக்க அரச பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரதேசத்தில் காணி உறுதிப்பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது தலா ஏழு பேர்ச் நிலப்பரப்பை கொண்ட காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டு மோசமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரத்தை கிரமமான முறையில் விருத்தி அடையச் செய்வது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பிரதமர் அதன்போது தெரிவித்தார். (இ)







# மகிந்த வழங்கிய சேலை துமிந்தவிடம் ரைம்ஸ் செய்தி தெளிவான உண்மை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ சீன நிறுவனம் ஒன்றிடம் இலஞ்சம் பெற்றதாக நியூயோர்க் ரைம்ஸ் அம்பலப்படுத்தியுள்ள செய்தி தெளிவான உண்மை என நம்புவதாக அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் விமான நிலைய வீதியில் அமைந்துள்ள அமைச்சரின் வீட்டில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

பத்திரிகையில் வெளியான விடயங்களில் செயல்ரீதியாக நடந்த பல உண்மைகள் காணப்படுகின்றன. கடிகாரங்கள், சேலைகள் எனக்கும் கிடைத்தன. அவை இன்னும் என்னிடம் இருக்கின்றன.

சீன நிறுவனம் மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தல் செலவுகளுக்காக பணம் வழங்கியிருந்தால் அதனை இலஞ்சமாகவே நாங்கள் காண்கிறோம். இதனால், இது குறித்த விடயங்களைக் கண்டறியும் மிகப் பெரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

இந்தப் பத்திரிகை செய்தி வெளியாகி சில நாட்கள் கடந்துள்ள நிலையில், அரசாங்கம் அதுபற்றி இன்னும் பேசாமல் இருப்பது குறித்து ஆச்சரியமடைகின்றேன். அரசாங்கம் செய்தி தொடர்பாக தேடியறிய வேண்டும்.

இரண்டு மாங்காய்களை திருடினால் சிறையில் அடைக்கின்றனர். சிறிய திருட்டுச் சம்பவங்கள் பற்றி பேசாது இதுபோன்ற மிகப் பெரிய நிதி மோசடிகள் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துமாறு அரசாங்கத்தின் அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போது, அதிகரிப்பதும் விலைகள் குறையும் காலத்தில் குறைப்பதும் எமது அரசாங்கத்தின் கொள்கை. அதுவே நியாயமான விடயம். இதனால், சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 138 ரூபாவாக குறைக்கப்பட்டது. இது மக்கள் நம்பக்கூடிய முறை.

மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் சமையல் எரிவாயு விலைகளைக் குறைக்கவில்லை. அப்படியாராவது நினைத்தால், அது அரசியல் அறியாமை.

எவ்வாறாயினும் மாகாண சபைத் தேர்தலை மிக விரைவாக நடத்துமாறு நாங்கள் கூறுகிறோம். மாகாண சபைத் தேர்தலில் யார் வெல்லப் போகின்றார் கள் என்பது பிரச்சினையல்ல.

மாகாண சபையை ஆட்சி செய்ய அரசியல்வாதிகள் அவசியம். இதனால், நியாயமான, சரியான முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ)

## இன்று ஒரு தகவல்

### தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளலாமா?

நமக்குத் தெரிந்த மாதிரி ஓர் உண்மையை அல்லது ஒரு சம்பவத்தை ஒருவர் நமக்குப் புதிதாகச் சொல்ல முற்படும் போது நாம் என்ன செய்கிறோம்? தெரியும் தெரியும், நீ வாயை மூடு என்கிற பாணியிலோ, அல்லது ஆர்வமாக மிக நாகரிகமாகவோ அவர்களது வாயை அடைத்து விடுகிறோம்.

இது நான்கு விதங்களில் தவறான செயலாகிவிடுகிறது.

முதலாவது ஒருவரின் ஆர்வமான முயற்சிக்கு நாம் தடை போட்டு விடுகிறோம். உடனே அவருக்கு புஸ் என்று காற்றிறங்கியது போல் ஆகிவிடுகிறது.

இரண்டாவதைப் பார்ப்போம். நமக்கு ஓர் இரகசியம் தெரியும். ஆனால் மற்றவர்களிடம் அது நமக்குத் தெரியாது என்பது போல்தானே காட்டிக் கொள்ள வேண்டும்? அந்த இரகசியத்தை மற்றவர்கள் போட்டுக் கொள்ளாவிட்டால் நம் முகத்திரை யல்லவா கிழிபட்டு விடுகிறது?

மூன்றாவது, மனிதர்கள் நடந்த ஒரு விடயத்தை எப்படியெல்லாம் உருட்டிப் புரட்டிப் பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு. அதுமட்டுமல்ல, இருவரிடையே நடந்த வாக்குவாதம் பற்றி ஒருவர் நமக்குச் சொல்லி விட்டால் மறுதரப்பு வாதம் என்ன என்பதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களை மதிப்பிடவும் புரிந்து கொள்ளவும் இந்த அணுகுமுறை.

நான்காவதாக, நாம் அறிந்து கொண்ட பல விடயங்கள் அரை வேக்காட்டு நிலை தான். மற்றவர்களைப் பேச அனுமதிக்கும் போது தான் இந்த அரை வேக்காட்டுத்தனம் நீங்கும்.

சில நேரங்களில் நாம் வகையாகச் சிக்குவோம். அப்போது எப்படிச் சமாளிக்க வேண்டும் தெரியுமா?

முதலாவது விடயத்தில் "நீங்க ஆர்வமாகச் சொல்லும் போது அதை மறுத்து உங்க மனசைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னுதான்" என்பது நம் பதிலாக இருக்க வேண்டும். வகுப்பில் வாத்தியார் பதில் தெரிஞ்சி வச்சுக்கிட்டே கேள்வி கேக்கலையா? அப்படீன்னு வச்சுக்குங்களேன் என்றும் சொல்லலாம்.

இரண்டாவது விடயத்தில் இரகசியத்தைக் கடைசிவரை இரகசியமாகவே காப்பாற்றுவது என் இயல்பு என்று சொல்ல வேண்டும்.

மூன்றாவது விடயத்தில் மறுபக்கம் என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியணுமில்லையா?

நான்காவது, சரியாகத் தெரிஞ்சுக்காம ஒரு முடிவுக்கு வரக் கூடாதுன்னுதான் புதுசாக் கேட்டுக்கிட்டேன்.

திரும்பவும் சொல்கிறேன் அப்பாவி வேடம் தான் மிகச் சிறந்த ஹீரோ வேடம்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி லண்டனில் தமிழர்கள் பாரிய ஆர்ப்பாட்டம்





(லண்டன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 500 நாட்களாக மேற்கொள்ளப்பட்டாலும் தற்போதைய அரசாங்கத்தால் இது வரை எந்தவித காத்திரமான முடிவுகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் நோக்கில் நேற்று முன்தினம் பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்களால் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இந்த போராட்டத்தில் பெருமளவான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படத்தை தாங்கியபடியும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கோசம் எழுப்பினர். பல புலம்பெயர் அமைப்புக்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியது குறிப்பிடத்தக்கது. (இ)

## 80மில்லியன் ரூபா பெறுமதியான தங்கநகைகள், பணம் கொள்ளை

(கொழும்பு)

அநுராதபுரம், தலாவ பிரதேசத்தில் அமைந்துள்ள அரச வங்கியொன்றில் 80 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வார இறுதி நாட்களில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை ஊழியர்கள் வங்கியைத் திறந்த சமயத்தில் கொள்ளை தொடர்பில் அறிந்து தமக்கு தகவல் அளித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வங்கியில் பொருத்தப்பட்டிருந்த, சி.சி.ரி.வி. கமரா மற்றும் உபகரணங்களும் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அநுராதபுர பொலிஸ் நிலையத்தின் ஐந்து விசேட குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## குளவி கொட்டு 20பேர் பாதிப்பு

(மஸ்கெலியா)

மஸ்கெலிய குயின்லென்ட் தோட்டத்தைச் சேர்ந்த 21 தொழிலாளர்கள், குளவிக் கொட்டுக்கு உள்ளான நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை மலையில்கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் 16 பெண்களும் 4 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தோட்ட நிர்வகம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 18 பேர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்றும் மூவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ)

## மகிந்தவை சு.கவின் இணைத் தலைவராக நியமிக்க முடியாது

### செயலர் பியதாஸ மறுப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணைத் தலைவராக நியமிக்க முடியாது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பேராசிரியர் றோகண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

"சிலர் மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியின் இணைத் தலைவராக நியமிக்க வேண்டும் என்கின்றனர். ஆனால் கட்சியின் யாப்பின்படி அதனைச் செய்ய முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின்படி, கட்சியின் உறுப்பினராக உள்ள ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் தானாகவே கட்சியின் தலைவராகவும் ஆகிவிடுவார்.

முன்னாள் ஜனாதிபதிகள் காப்பாளர்களாகவே இருக்க முடியும். கட்சி யாப்பின்படி சந்திரிகா குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்ஷவும் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிகப் பொருத்தமான ஒரு வேட்பாளரை நிறுத்தும்.

அந்த வேட்பாளர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் தெரிவு செய்யப்படுவார். அவர் பொதுவேட்பாளராக இருக்க மாட்டார்.

எனினும், மிகச் சிறந்த வேட்பாளரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது கடினமானது. அது சவாலை ஏற்படுத்தும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## மாத்தறையில் கொள்ளை; வாகனத்துடன் ஒருவர் கைது!



(கொழும்பு)

மாத்தறை நகைக்கடைக் கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வாகனத்துடன் நபர் ஒருவரை நேற்று அதிகாலை களுத்துறை மாவட்ட குற்றவியல் தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தலகல, பாவனா வீதி, மொரகஹஹேன எனும் முகவரியிலுள்ள வீட்டில் வைத்தே குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தறை நகைக்கடை கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் CAE 4706 எனும் வெள்ளை நிறமுடைய அல்டோ ரக மோட்டர் வாகனம் தொடர்பில் பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது அது பெண் ஒருவருடையது என தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேகநபர்கள் குறித்த வீட்டில் 4 மாத காலம் தங்கி இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடைய கொஸ்கொட தாரக, உயிரிழந்த சாமர மற்றும் சம்பவம் தொடர்பில் இதுவரையில் கைது செய்யப்படாமல் உள்ள கொஸ்கொட தில்சான் எனும் நபர் ஆகியோர் குறித்த வீட்டில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை குறித்த வீட்டை மாவட்ட குற்றவியல் தடுப்புப் பிரிவினர் சுற்றி வளைத்த போது, வாகனத்தின் உரிமையாளரான பெண்ணின் கணவர் வந்ததையடுத்து குறித்த நபரையும் வாகனத்தையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மடபாதகே கபிலகுமார எனும் 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மூவரையும் குறித்த வாகனத்தின் மூலமே வைத்தியசாலைக்கு அழைத்து சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ)

## தொற்றாநோய் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் தொற்றா நோய்களினால் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்றாநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 9,500 நோயாளர்கள் நாளாந்தம் சிகிச்சை பெற்றுவருவதாக தொற்றா நோய்ப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் திலக் சிறிவர்தன தெரிவித்துள்ளார். வருடந்தோறும் 3 மில்லியன் பேர் தொற்றாநோய்பாதிப்பிற்கு உள்ளாவதாகவும்அவர்தெரிவித்தார்.

இந்நிலையில், தொற்றா நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்தொற்றாநோய்ப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேநேரம், தொற்றா நோய் காரணமாக நாளாந்தம் 245 பேர் உயிரிழப்பதாகவும் தொற்றாநோய்ப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.(இ)

## உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரை ஆசிரியர்களாக இணைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரை இணைத்துக் கொள்வதற்கு கல்வி இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை எதிர்வரும் நாட்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மத்திய, ஊவா, சப்ரகமுவ, வட மேல் மாகாணங்களிலுள்ள தோட்டப் பாடசாலைகளில் 3,868 வெற்றிடங்கள் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையில் அனுமதி கிடைத்தவுடன், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வே. இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் நட்டம் 240 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

2017ஆம்ஆண்டுஇலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம், 2016 ஆம் ஆண்டைவிட 240 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அண்மைய அறிக்கையின்படி, 2017ஆம் ஆண்டில் மின்சார சபைக்கு 49,231 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் 14,499 மில்லியன் ரூபாவாகும்.

மின்சார சபையை நடத்திச் செல்வதற்கான செலவு கடந்த 2016ஆம் ஆண்டு இரண்டு இலட்சத்து 31 ஆயிரத்து 147 மில்லியன்களாக, காணப்பட்ட நிலையில், கடந்த வருடம் அந்தத் தொகை இரண்டு இலட்சத்து 72 ஆயிரத்து 962 மில்லியன்களாக அதிகரித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பிரதேசங்களில் நிலவிய வறட்சியுடன் கூடி வானிலை காரணமாக, உற்பத்தி குறைந்தமையும் இதற்குக் காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்காக 152 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் 184 பில்லியன் ரூபாவாக அது அதிகரித்துள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு அரச வங்கிகளில் இருந்து 6,108 மில்லியன் ரூபாய் கடனைப் பெற்ற மின்சார சபை, 2017 ஆம் ஆண்டில் 8,691 மில்லியன் ரூபாயை கடனாகப் பெற்றுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# தேர்தலுக்கு முன்னர் மகிந்தவை பிரதமராக்குவோம்-டிலான் உறுதி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூலமாக முன்னாள் ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவை அடுத்த தேர்தலுக்கு முன்னர் பிரதமராக நியமிக்க அனைத்து விதமான முயற்சிகளையும் எடுக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளனர்.

இந்த எண்ணிக்கையை அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தின் போது 80 ஆக அதிகரிக்க எண்ணியுள்ளோம். இதன் மூலம் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு இருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை குறைக்க எண்ணியுள்ளோம்.

இதனை தவிர எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில்முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரிக்கும்வேட்பாளரை தாமும் ஆதரிக்க போவதாகவும் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ)

# ஊர்வலத்தில் திடீரென மதம் கொண்ட யானை

## 31 பேருக்கு காயம்



(கொழும்பு)

காவத்தை பகுதியில் இடம்பெற்ற ஊர்வலமொன்றின் போது யானை ஒன்றுக்கு மதம் பிடித்து தாக்கியதனால் ஊர்வலத்தில் கலந்துகொண்ட 31 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக காவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 19 பெண்களும் 12 ஆண்களும் அடங்குவதாகவும் சம்பவத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவரும் காயமடைந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (இ)

# மத்தளவுக்கு மீண்டும் விமானங்கள் வரும்

## பிரதமர் ரணில் நம்பிக்கை




(கொழும்பு)

மத்தள விமான நிலையத்துக்கு இந்த ஆண்டு இறுதியில் இருந்து மீண்டும் அனைத்துலக விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மத்தள அனைத்துலக விமான நிலையத்துக்கு சேவையை நடத்தி வந்த ஒரே ஒரு விமான சேவையான பிளை டுபாய் நிறுவனமும், அண்மையில் தனது சேவையை நிறுத்தியது.

இதையடுத்து, மத்தள விமான நிலையத்துக்கு தற்போது பயணிகள் விமான சேவைகள் எதுவும் இடம் பெறுவதில்லை.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் கண்டியில் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "முன்னர் மத்தள விமான நிலையத்தில் பறவைகள் மாத்திரம் தரையிறங்கின.

இப்போது, மத்தள விமான நிலையத்தில் இருந்து வணிக விமானங்களை இயக்குவது தொடர்பாக, அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு இறுதியில் இருந்து, அனைத்துலக விமானங்கள் மத்தளவிலிருந்து மீண்டும் சேவைகளை ஆரம்பிக்கும்" என்று நம்பிக்கை வெளியிட்டார். (இ)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 2 (சந்திரன்)**
**(சமுதாயச் சிற்பிகள்)**

திரவ சம்பந்தப்பட்ட தொழில், நூல்மில், துணி உற்பத்தி,சினிமா, விளையாட்டு, ஆடை, ஆபரணம், அழகுக்கலை, நகை, சமூக சேவை, கலைத்தொழில், மருந்து, பால், எண்ணெய், குளிர்பானம், கப்பல் கட்டும் தொழில், கடல்வழிப் பயணம், ஏற்றுமதி, இறக்குமதி, பூகட்டுதல், உணவுப் பொருட்கள் உற்பத்தி, காய் கனிகளை வியாபாரம் செய்தல், வாசனைத் திரவியம் தயாரித்தல், நாடகம், கதை, காவியம், விவசாயம், போட்டோ. மகிழ்விக்கும் கலைகள், சிற்பம் செதுக்குதல், கடவுள், சாஸ்திரம், வேதம், இசைத்துறை, பழைமையை புதுப்பித்தல், சட்டம், நீதி, சங்கீதம், ஆடல், பாடல், திருக்கோவில் கட்டுதல், இயற்கை வளத்தைப் பராமரித்தல், நீச்சல், நீரில் சகாசம்,கேளிக்கை,அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பு, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் பராமரித்தல், இலக்கியம், சுற்று லாத் துறைகள், விளையாட்டுச் சாதனப் பொருட்கள் தயாரிப்பு,படமெடுத்தல், ஒளிப் பதிவு, நடிப்பு, வசனம், பாட்டுப் பாடுதல், பேச்சு, எழுத்து போன்ற துறைகள் இவர்களுக்குப் பொருள் சேர்க்கும்.

**சந்திர ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாட்கள்**

1,10,19,28,7,16,25 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாட்களாகும். 28ஆம் திகதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தருவதில்லை. சந்திரனும், சனியும் ஆக 2ஆம், 8ஆம் சேர்ந்திருப்பதால் முழுமையான வெற்றிகள் கிடைப்பதில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1,10,19 திகதிகள் அதிர்ஷ்ட தினங்களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 1 வரும் நாட்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாட்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக்கூடிய




காரி யங்களை கூட்டு எண் ஒன்று வரும் நாட்களில் செய்து வர வேண்டும். 2, 11, 20,29 திகதிகளில் பாதி அதிர்ஷ்டமாகவும் பாதி துரதிர்ஷ்டமாகவும் அமையும். இந்த சந்திர ஆதிக்க நாட்களில் புது முயற்சிகளிலும் ஈடுபட்டால் பாதி வளர்ச்சியும் பாதித் தளர்ச்சியும் ஏற்படும்.

**துரதிர்ஷ்ட நாட்கள்**

தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்சிகளையும் 9,18,27 ஆகிய நாட்களிலும் 8,17,26 ஆகிய நாட்களிலும் செய்யக் கூடாது. இந்த இரண்டு எண்களும் சந்திக்கும் நாட்களில் மிகப் பெரிய தோல்விகள் கிடைக்கும். பெரும் நஷ்டம் ஏற்படும். தவறான நாளில் பெற்ற வெற்றிகள் நிலைக்கா உடனே பறிபோய்விடும். ஆகாத நாட்களில் முக்கியமான காரியங்களில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தாலே போதும். அதிர்ஷ்டமடையத் துரதிர்ஷ்ட நாட்களை விலக்கி அதிர்ஷ்ட நாட்களில் முக்கியமான காரியங்களை மேற்கொண்டால் போதும். பன்மடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

பச்சை, பச்சை கலந்த நிறங்கள், மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை, பொன்னிறம், வெண்மை போன்ற வர்ணங்கள் சந்திர ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும். அதிர்ஷ்ட நிறங்களில் அணியும் ஆடைகள், வசிக்கும் இடங்களில் பேனா, பென்சில், விசிட்டிங் கார்டுகள்,வண்டி, வாகனம் போன்ற அனைத்து விதமான உபயோகப்பொருட்களையும் அதிர்ஷ்ட நிறங்களில் உபயோகித்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட நிற பேனாவால் அதிர்ஷ்ட நிற மையால் கையெழுத்திட்டு வர வேண்டும். விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, சிவப்பு, கோப்பி கலர், இருண்ட நிறங்கள் இவர்களுக்கு வீண் அலைச்சலையும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தும். பல நிறங்கள் கலந்த இருண்ட நிறங்கள் இவர்களுக்குக் காரியத்தடைகளையும் காரியத் தோல்விகளையும் ஏற்படுத்தும்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

முத்து, வைடூரியம், ஜேட், சந்திரகாந்தக்கல், டைகர்ஸ்டோன் போன்றவை வலது கை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட இரத்தினங்களை தோஷ மில்லாததாகப் பார்த்து அவரவர் அதிர்ஷ்ட நாளன்று வாங்கி அதிர்ஷ்ட நாளில் அணிந்து கொள்ள வேண்டும்.

**அதிர்ஷ்ட உலோகம்**

வெள்ளி இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். தங்கம் இவர்களுக்கு ஒத்துக் கொள்ளும். இரண்டையும் சரி விகிதத்தில் சேர்த்து அணிந்து கொள்ள வேண்டும். மோதிரம், காப்பு, அட்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்ட இரத்தினங்களைத் தங்க மோதிரத்தில் பதிந்து அணிந்து கொள்ளலாம். அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான்-இலங்கை உறவும் இந்தோ-பசுபிக் எதிர்காலமும்

சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில், இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் ஜப்பான் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக ஜப்பான் நாட்டு பிரதமர் சின்சோ அபே தெரிவித்தார்.

இப்பிராந்தியத்தில் ஜப்பான் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்குடனேயே கடந்த ஜனவரி மாதம் இந்நாட்டுப் பிரதமர் அபே பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொண்டதுடன் கடந்த மார்ச் மாதம் டோக்கியோவில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் முக்கிய பேச்சுக்களையும் நடத்தியிருந்தார்.

இப்பேச்சுக்களின் போது பொருளாதாரம், கடல்சார் ஒத்துழைப்பு, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒழுங்கு தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைமையில் மேற்கொள்ளப்படும் சுதந்திரமான மற்றும் திறந்த இந்திய-பசுபிக் மூலோபாயத்தை விரிவுபடுத்தும் முயற்சியாக இலங்கையின் சுகாதார நலன் பேண் சேவைகளுக்காக 100.4 மில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்று ஜப்பான் மற்றும் இலங்கை அரச தலைவர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டது.

ஜப்பான், இலங்கையின் மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குநர்களுள் ஒன்றாகக் காணப்படுவதுடன் இதன் பிரதான அபிவிருத்திப் பங்காளியாகவும் உள்ளது. இவ்விரு நாடுகளும் தமக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை 1952இல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருந்தன.

ஆனால் இலங்கை உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னரே ஜப்பானுடனான இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்தது. 2016இல் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகள் 971.6 மில்லியன் டொலரை எட்டியிருந்தது.

இலங்கைத் தீவின் மூலோபாய அமைவிடத்தை நோக்கும் போது, இலங்கையானது சீனாவினதும் வேறு நாடுகளினதும் ஆளுகைக்கு உட்பட்டுள்ளதுடன் இந்த நாடுகள் இந்திய மாக்கடலில் தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கையை பயன்படுத்துகின்றன.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகள் இலங்கையைத் தமது பெறுமதிமிக்க கூட்டணி நாடாகவும் தமது இராஜதந்திர நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான ஒரு நாடாகவும் நோக்குகின்றன.

இலங்கையை ஜப்பான் எவ்வாறு தனது பூகோள அரசியல் பங்காளியாகக் கொண்டுள்ளது என்பது தொடர்பாகவும் ஜப்பானிய-இலங்கை இராஜதந்திரமானது எதிர்காலத்தில் எவ்வாறு அமையப்போகின்றது என்பது தொடர்பாகவும் இப்பத்தி மூலம் ஆராயப்படுகிறது.

பேர்சியன் வளைகுடாவை மலாக்கா நீரிணையுடன் இணைக்கும் ஆரையின் மையத்தில் இலங்கை அமைந்துள்ளதால் இதன் அமைவிடமானது இந்திய மாக்கடலில் மிகமுக்கிய பங்கை வகிக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும், இலங்கைக்குச் சொந்தமான கடலிலிருந்து 10 கடல்மைல் தூரத்திலுள்ள கடல் வழியாக 60,000 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் பயணிக்கின்றன.

உலகின் எண்ணெய் வழங்கலின் மூன்றில் ஒரு பங்குக் கப்பல்களும் அரைவாசி சரக்குக் கப்பல்களும் இலங்கையை அண்மித்த இந்திய மாக்கடல் கடல் பாதையின் ஊடாகவே பயணிக்கின்றன. ஜப்பான் தனக்குத் தேவையான 90 வீத பெற்றோலிய வளத்தை இறக்குமதி செய்கின்றது.

இந்நிலையில் சீனாவின் செல்வாக்கானது இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் நிலையில் இது ஜப்பானின் பெற்றோலிய வள இறக்குமதிக்கு அச்சுறுத்தலாக அமையும் என ஜப்பான் கருதுகிறது.

இவ்வாறு எழுச்சி பெற்று வரும் சீனாவின் செல்வாக்கு மற்றும் இதன் இராணுவ நவீனமயமாக்கல், தென் சீனக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செயற்பாடுகள் போன்றன ஆசியாவின் பாதுகாப்புச் சூழலை சீர்கெடுக்கின்றன.

பனிப்போருக்குப் பின்னான காலப்பகுதியில், ஜப்பானானது அமெரிக்காவுடன் நல்லுறவுகளை விரிவுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இருப்பினும், ஜப்பான் பன்முக உறவுகளைக் கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்துகிறது.

குறிப்பாக நுணுக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதிலும் பொதுவான பிராந்தியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ஜப்பான் கவனம் செலுத்துகிறது. இதன் தொடர்ச்சியாக, பிராந்திய ஒழுங்கை உறுதிப்படுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர உடன்படிக்கைகளையும் தனது அயல்நாடுகளுடன் ஜப்பான் மேற்கொள்கிறது.

இதன் முதற்கட்டமாக அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையில் முத்தரப்பு கலந்துரையாடல் ஒன்று கடந்த ஜூன் 2015இல் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறான ஜப்பானின் நகர்வுகளுக்கு இலங்கையானது மூலோபாய மற்றும் சாதகமான பாதுகாப்பு பங்காளி நாடாக பயன்படுத்தப்படுகிறது. இது கூட்டணி நாடுகளுக்கு இடையில் ஆழமான புரிந்துணர்வை மேலும் அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு

இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் ஜப்பானின் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும் நிலையில், ஜப்பானிய கடல்சார் தற்பாதுகாப்பு படைகள் அமெரிக்கா மற்றும் இந்திய கடற்படைகளின் மலபார் கடற்பயிற்சிகளுடன் இணைந்து கொண்டதுடன் ஜப்பான் 2015இல் மலபார் பயிற்சி நடவடிக்கைகளின் நிரந்தர உறுப்பு நாடாகவும் மாறியது.

இலங்கை கடற்படையானது மலபார் கூட்டு கடற்பயிற்சியின் போது ஒரு பார்வையாளராகக் கலந்து கொள் [illegible] 2015இல் [illegible]

அபே யோசனை தெரிவித்திருந்தார். மலபார் கடற்பயிற்சி முடிவடைந்த பின்னர் இரண்டு ஜப்பானியக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்தமையானது இலங்கை தொடர்பான அபேயின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது.

ஏப்ரல் 2017இல் ஜப்பான்-இலங்கை உச்சிமாநாடு இடம்பெற்ற போது, ஜப்பான் மற்றும் இந்தியாவின் கரையோரப் பாதுகாப்புப் படைகளுக்கு இடையில் இடம்பெறவுள்ள கூட்டுப் பயிற்சி நடவடிக்கையின் போது இலங்கை பார்வையாளராகக் கலந்து கொள்ள வேண்டும் எனவும் இதற்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் ஜப்பானியப் பிரதமர் அபே மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியன ஜப்பானின் கடற்படைக் கூட்டுப் பயிற்சி கடந்த ஜனவரி 2018இல் இடம்பெற்ற போது அதில் பார்வையார்களாகக் கலந்து கொண்டமையானது ஜப்பானின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியது.

தொழில்நுட்பத் திட்டங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதன் ஊடாக கடல்சார் பாதுகாப்பைப் பலப்படுத்துவதை ஜப்பான் நோக்காகக் கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, இலங்கை அரசாங்கத்திற்கும் ஜப்பான் அனைத்துலக ஒத்துழைப்பு அமைப்பிற்கும் இடையில் ஜூன் 30, 2016இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக ஜப்பானால் இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படையினருக்கு ரோந்துப் படகுகள் வழங்கப்பட்டன.

பயன்படுத்தப்பட்ட P-3C கண்காணிப்பு விமானங்களை ஜப்பான், இலங்கைக்கு வழங்கலாம். இந்த விமானங்கள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்கொரியா, நியூசிலாந்து போன்ற ஜப்பானியக் கூட்டணி நாடுகளால் பயன்படுத்தப்படுவதுடன் இவை தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கு அனுசரணை வழங்க முடியும்.

## கட்டுமானத்தை விருத்தி செய்தல்

ஏப்ரல் 2017இல், 9.46 மில்லியனை திருகோணமலைத் துறைமுக அபிவிருத்திக்காக முதலீடு செய்யவுள்ளதாக ஜப்பான் தனது தீர்மானத்தை அறிவித்தது. சீனா மட்டுமல்லாது ஜப்பான், இந்தியா போன்ற பிராந்தியப் போட்டி நாடுகள் கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் முதலீடு செய்வதில் ஆர்வம் காண்பிக்கின்றன.

2010 இன் பின்னர் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுமாறு இலங்கை இந்தியாவிடம் கேட்டுக்கொண்டது. ஆனால் செலவு கூடிய இலங்கையின் திட்ட வரைபை இந்தியா ஏற்க மறுத்தது.

இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் முதலீடு செய்யுமாறு சீனாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்தது. சீனாவும் பல பில்லியன் டொலர்களை இதில் முதலீடு செய்யத் தீர்மானித்தது. கடன் சுமையால் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்த இலங்கையால் சீனாவிடமிருந்து பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாதிருந்தது. இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு சீனாவிடம் கையளித்தது.

இத்துறைமுகத்தை சீனா தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதானது. இதனை சீனா தன்து இராணுவத் தளத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்துமோ என்கின்ற அச்சம் எழுந்துள்ளது.

இவ்வாறான இராணுவத் தளத்தை அமைப்பதற்கான அனுமதி ஒருபோதும் வழங்கப்படமாட்டாது' என கொழும்பு உறுதியளித்த போதிலும் சீனா தொடர்பான அச்சம் தொடர்ந்தும் நிலவுகிறது.

## சவால்கள்

சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தின் போது இலங்கையை சீனா தனது அதிகாரத்திற்குள் கொண்டு வர முயற்சித்தது. எனினும் தனது நாட்டின் மீது மேலும் வெளிநாட்டு முதலீடுகள் தேவை எனக் கருதி ஜப்பான், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடனான தனது உறவை ஆழமாக்கியது இலங்கை

ஜனநாயகம், சட்ட ஆட்சி, செழுமைப் பகிர்வு போன்றவற்றின் அடிப்படையில் பெப்ரவரி 2016இல் இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகியன தமது முதலாவது பங்காளி கலந்துரையாடலை மேற்கொண்டன. இவ்விழுமியங்கள் சீனாவின் செல்வாக்கை முறியடிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா கூட்டணி அமைப்பிற்கும் பேருதவியாக அமைந்துள்ளன.

ஜப்பான் மற்றும் இலங்கை ஆகியன தற்போது ஆழமான நட்புறவைப் பேணி வருகின்றன. இதன்மூலம் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் ஜப்பான் நிரந்தரமான பங்களிப்பைக் கட்டியெழுப்புவதற்கும் உதவுகிறது.

எனினும் விழுமியங்களை அல்லது நலன்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் இந்திய மாக்கடல் பிராந்தியங்களில் பல கூட்டணிகள் உருவாவதால் இதற்குள் இலங்கை அகப்படும் நிலையும் உருவாகலாம்.

அடுத்த ஆண்டு இலங்கையிலும் இந்தியாவிலும் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில், சீனா-இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையிலான விரிசல்கள் மேலும் ஆழமாக்கப்படலாம்.

இறுதியாக, ஜப்பானிய தற்பாதுகாப்புப் படைகளை வழமையான இராணுவமாக மாற்றுவதற்கான அபேயின் முயற்சிகள் பிராந்தியத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்துவதற்கும் காரணமாக இருக்கலாம்.

இவ்வாறான முன்னேற்றங்கள் எதிர்கால ஜப்பான்-இலங்கை உறவைக் கட்டியெழுப்புவதற்கு உதவினாலும் கூட, தற்போது ஜப்பான் மற்றும்இலங்கைக்கு இடையிலான இடைக்கால இருதரப்பு உறவுநிலையானது இந்திய-பசுபிக்கின் எதிர்காலத்தை பிளவுபடுத்துவதற்கும் காரணமாக இருக்கும்.



ஆங்கிலத்தில் – Anne-Leonore Dardenne
வழிமூலம் – IAPS Dialogue
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘போதை ஒரு நஞ்சு; அது அழிக்கும் உன்னை’ மல்லாவியில் விழிப்புணர்வு வாகனப் பேரணி



(பனிக்கன்குளம்)

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு வாகன பேரணி நேற்று முற்பகல் 11.30 மணிக்கு மல்லாவி பகுதியில் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் துணுக்காய் பிரதேச சபை பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மல்லாவி அனிஞ்சியன்குளம் பாடசாலை முன்பாக ஆரம்பித்த இந்த கவனயீர்ப்பு வாகன பேரணியானது துணுக்காய் பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.

மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் பேரணியாக சென்றதோடு பேரணி மல்லாவி மத்திய கல்லூரியை அடைந்தபோது மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்கள் பாடசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தியதோடு பேரணி துணுக்காய் பிரதேச செயலகம் சென்றபோது துணுக்காய் பாடசாலை மாணவர்களும் பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டு மக்களை விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரம் கடந்த 2018.06.26 முதல் 2018.07.02 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட.து இதன் இறுதி நாளான இன்று மக்களை விழிப்புணர்வூட்டும் முகமாக இந்த கவனயீர்ப்பு வாகன் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

விழிப்புணர்வுப் பேரணியில் ஈடுபட்டவர்கள், “போதைப் பொருளை ஒழித்து வறுமைக்கு முற்றுப்புள்ளி வை. கடனாளியாக்கும்போதைப்பொருட்கள் வேண்டாம். வடி குடிக்காதே! ஈரலை அழிக்காதே! போதையை ஒழிக்கும் பாதையை வளர்ப்போம், ஆபத்தான புகைத்தலை அடியோடு நிறுத்தி விடுங்கள் ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தம்முடன் ஏந்தியிருந்தனர். (2-281)

# றெஜினாவின் படுகொலையை கண்டித்து அமைதி வழி போராட்டத்துக்கு அழைப்பு

## முருங்கன் பேருந்து தரிப்பிடத்திலிருந்து பேரணி இன்று ஆரம்பம்




(மன்னார்)

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த மாணவி றெஜினாவின் படுகொலையை கண்டித்தும் நாடு முழுதும் இடம் பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளை எதிர்த்தும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முருங்கன் பேருந்து தரிப்பிடத்தில் அமைதி பேரணி ஒன்று இடம் பெறவுள்ளது.

மன்னார் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து குறித்த அமைதி பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முருங்கன் பேருந்து தரிப்பிடத்தில் குறித்த பேரணி ஆரம்பமாகவுள்ளது.

மேலும் இன்று செவ்வாய்க் கிழமை மன்னார் மாவட்ட ரீதியில் முழு கடையடைப்பை மேற்கொள்ளவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

வன்னிக்குறோஸ் நிறுவனம் அதன் கல்வி மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளதுன.

புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்தில் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.றூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 78 பாடசாலை மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிட்ட வங்கி புத்தகமும் வழிகாட்டி புத்தகங்களும் வன்னிமாவட்ட நாடாளமன்ற உறுப்பினர் சி.சிவமோகனினால் வழங்கிவைக்கப்பட்டன. (2-281)

# சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டாலும் போதிய வருமானம் ஈட்டமுடியவில்லை

## பெண் தலைமைத்துவ குடும்பங்கள் கவலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமக்கான குடும்ப வருமானங்களின்றி பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 3ஆயிரத்து942 குடும்பங்களில் 610 வரையான குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்களாக காணப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது நிலவும் வறட்சி,தொழில் வாய்ப்பின்மை ஆகிய காரணங்களால் இப்பகுதியில் வாழும் சுமார் [illegible] வரையான பெண்தலை[illegible] குடும்பங்களில் கூடுதலான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்களின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன.

மேற்படி குடும்பங்கள் பல சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அதற்கான போதிய வருமானம் இன்மை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நுண்கடன் நிதி நிறுவனங்களில் கூடுதலான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதி கூடிய வட்டிக்கு கடன்களை பெற்று அவற்றை [illegible] பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லர் ஆட்சியை நாம் நடத்தவில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களுக்குச் சேவை செய்யும் பொழுது கடந்த ஆட்சியைப்போல் ஹிட்லர் ஆட்சியை நாம் மேற்கொள்ளவில்லை. இன்று எமது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகின்றனர்.

ஆனால் அன்று அவர்கள் பெற்ற கடன் களையும் இன்று நாம் அடைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பன்விலை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கலாபொக்க பெருந்தோட்ட மக்களுக்காக 500 காணிகளுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பிரதேச பெருந்தோட்ட மக்களுக்கு இன்று மகிழ்ச்சிக்குரிய நாளாகும். எமது அரசாங்கத்தைப் பொறுத்தளவிலே சகல இன மக்களும் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ வழி சமைப்பதே நோக்கமாகும்.

காணிகள் வழங்கும் திட்டத்தைவிட மலையகத்தில் கிராமங்கள் அமைக்கும் திட்டமாகவே இதை நாம் கருதுகின்றோம். அதே போல் சிங்கள மக்களுக்கும் இவ்வாறான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அமைச்சர் திகாம்பரம் காணியையும் கொடுத்து வீடும் கட்டி கொடுக்கின்றார். மக்களுக்கான சேவைகளை செய்வதில் எமது நல்லாட்சி அரசாங்கம் என்றும் பின்னிற்கப்போவதில்லை.

ஊடகங்களை எடுத்துக் கொண்டால் எம்மை குறை கூறி திருடர் என்கின்றார்கள். இன்றும் ஒரு பத்திரிகையில் என்னைத் திட்டி எழுதியிருந்தார்கள். மக்களுக்கு சேவை செய்யும் பொழுது கடந்த ஆட்சியைப்போல் ஹிட்லர் ஆட்சியை நாம் மேற்கொள்ளவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் குரங்குகளின் கூடாரமாக இருந்தது. அதற்காகவே அங்கு நெல்லை கொட்டினோம். குரங்குகள் சாப்பிடுவதற்காக செய்தோம். இது தான் ஹிட்லரின் சகோதரரின் ஆட்சிக்காலமாகும்.

இன்று துறைமுகத்தை பார்த்தால் சர்வதேச கப்பல்கள் வந்து இறங்கக்கூடிய துறைமுகமாக காட்சியளிக்கின்றது. அதே போல் விமான நிலையமும் உள்ளது.

இதுவே உண்மை நிலையாகும். கல்விக்கும் சுகாதாரத்திற்கும் முன்னுரிமை வழங்கியுள்ளோம். கருவாப்பட்டை உற்பத்தி, ஏலம் போன்ற அந்நிய செலவாணியை ஈட்டக்கூடிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றோம். பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தமிழ்மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு விஞ்ஞான ரீதியான அறிவினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இன்று ஒரு சில பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன. அதனை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை மேற்கொள்கின்றோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அனைத்தும் சரி செய்யப்பட்டு பொருளாதாரத்தில் தன்னிறைவை காண முடியும் என பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார். (இ)

# காதல் விவகாரத்தால் பாட்டி கொலை

## மாணவியும் காதலனும் விளக்கமறியலில்

(கொழும்பு)

காதல் உறவினை அறிந்து கொண்ட பாட்டியை கொன்று பொதிசெய்து கலஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுப் பிரதேசத்தில் வீசிய உயர்தர வகுப்பு மாணவியையும் அவரின் காதலனையும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கண்டி மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது குறித்த இருவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதில் கட்டுகஸ்தோட்டை கஹால்ல பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான குமாரி செனவிரட்ண என்ற வயோதிபப் பெண்ணே பேத்தியின் காதலனால் கொலை செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

பெற்றோர் பொலநறுவையில் வசித்து வந்த நிலையில் பாட்டியின் தனிமை கருதி அவருடன் தங்கி கட்டுகஸ்தோட்டை பிரதேச பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்று வந்த சந்தேக நபரான மாணவி சம்பவ தினமான கடந்த 24 ஆம் திகதி அம்பிட்டியைச் சேர்ந்த உயர் தரத்தில் கற்று வந்த மாணவனான தனது காதலனை வீட்டுக்கு வரவழைத்துள்ளார்.

இதனையடுத்து பேத்தியையும் குறித்த இளைஞனையும் கடுமையான தொனியில் ஏசி பாட்டி சத்தமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இச்சந்தர்ப்பத்தில் தமது காதல் உறவு பாட்டிக்கு தெரிய வந்ததால் அதிர்ச்சிக்குள்ளான இருவரும் பாட்டியை கட்டுப்படுத்துவதற்கு வேறு வழி தெரியாது திகைத்து நின்றுள்ளனர்.

இதன்போது காதலனான குறித்த இளைஞர் வீட்டுக் கதவிற்கு பாதுகாப்பாக போடப்பட்டிருந்த பொல் ஒன்றை எடுத்து பாட்டியின் தலையில் பலமாக தாக்கியுள்ளார். இதில் அவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அவரின் சடலத்தை பை ஒன்றில் சுற்றி கட்டிலுக்கு அடியில் போட்டு விட்டு இருவருமாக இணைந்து வீட்டை கழுவி தடயங்களை அழித்துள்ளனர்.

மறுநாள் 25 ஆம் திகதி இருவருமாக சேர்ந்து கண்டி நகருக்குச் சென்றுள்ளனர். அங்கு மாலைவரை சுற்றித் திரிந்து, சடலத்தை வீசி எறிவதற்கான இடத்தை தேடியுள்ளதோடு அன்று மாலை கார் ஒன்றை வாடகைக்கு பெற்று சந்தேக நபரான மாணவனே காரை செலுத்தி வந்துள்ளதோடு இடையில் அதன் இலக்க தகடுகளை கழற்றி எடுத்து கொண்டு வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் தாம் கடையில் வாங்கி வந்த கறுப்பு நிற பொலித்தீன் பைகளில் சடலத்தை போட்டு பிளாஸ்டரினால் நன்றாக ஒட்டி பொதி செய்து இரவு ஒரு மணியளவில் காரில் எடுத்துச் சென்று கலஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிதுள்முல்ல தோட்டப்பகுதி பற்றைக்காட்டுக்குள் வீசி விட்டு வரும் வழியில் கொலையுண்ட பெண்ணின் உடைகளை கண்டி நகரில் உள்ள சாக்கடைக்குள் போட்டுள்ளனர்.

இதன்பின் காதலனை வழியனுப்பிவிட்டு மறுநாள் 26 ஆம் திகதி காலை பாட்டியை காணவில்லை என உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் மாணவி அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் உயிரிழந்த பெண்ணின் மகளினால் தனது தாய் காணாமல் போயுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் குறித்த மாணவியிடம் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பொழுதே மேற்கூறிய விடயங்களை அவர் வாக்குமூலமாக வழங்கியுள்ளார். சடலம் வீசப்பட்ட இடத்தையும் அடையாளம் காட்டியுள்ளார்.

இதையடுத்தே குறித்த மாணவியும் அவரின் காதலனும் கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இதனையடுத்து இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ)

# செய்தித்துளிகள்

## வீட்டின் மீது குண்டு வீச்சு

### நால்வர் காயம்

(கொழும்பு)

குளியாப்பிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதல் சம்பவத்தால் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்களுள் பெண்ணொருவரும் அடங்குவதாகவும், தனிப்பட்ட தகராறே இந்த கைக்குண்டு தாக்குதலுக்கு காரணமென்றும், தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில், அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (இ)


## மீன் திருடியவர் மறியலில்

(திருமலை)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் மீனவர் ஒருவரின் 10 கிலோகிராம் நிறையுடைய மீன்களை திருடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.அன்பாஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேகநபரை எதிர்வரும் பத்தாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அவருக்கு எதிராக பல திருட்டு வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## தந்தங்களுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

பிலிமத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பமுனுவ பகுதியில் நான்கு யானைத் தந்தங்கள் வைத்திருந்த ஒருவரை கைதுசெய்துள்ளதாக பிலிமத்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி மாவட்ட தொல்பொருள் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய அவரது வீட்டை நேற்று முன்தினம் சோதனை நடத்தியபோதே குறித்த நான்கு யானைத் தந்தங்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## பெண்கள் மீது கத்திக்குத்து சந்தேக நபரும் உயிரிழப்பு

(கொழும்பு)

ஊறுபொக்க, மில்லமுல்லஹேன பகுதியில் நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட கத்தித் குத்து தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் மூன்று பெண்களை கத்தியால் குத்தித் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், தாக்குதலில் படுகாயமடைந்த பெண்கள் ஹீகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மில்லமுல்லஹேன பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


கொலைச்- சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான 40 வயதுடைய ஒருவர் கொலை செய்த வீட்டிற்கு அருகில் உள்ள மற்றுமொரு வீட்டில் மயக்கமுற்று விழுந்திருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவரும் உயிரிழந்துள்ளார். கொலைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## வியாபார தந்திரம்



பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர் ஒரு "பேருந்து ஒன்றில் பழக்கூடையுடன் ஏறினார். " ஐந்து பழங்கள் பத்து ரூபாய் என்று கூவிக் கூவி பழங்களை விற்பனை செய்ய முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. கூடையை சுமக்க முடியாமல் சுமந்தபடி அவர் கீழே இறங்கியதும் இளைஞன் ஒருவன் பேருந்தில் ஏறினான். "ஆறு பழங்கள் பத்து ரூபாய்!" என்று கூவினான், அவனுக்கு நல்ல விற்பனை.

மீண்டும் மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர் அங்கும்" ஐந்து பழங்கள் பத்து ரூபாய்" என்று கூறி விற்க முயன்றார், அங்கும் பலனின்றி போகவே கீழே இறங்கிவிட்டார். அடுத்து" ஆறு பழங்கள் பத்து ரூபாய்" என்று கூவியபடி ஏறிய இளைஞன் அனைத்தையும் விற்று முடித்துவிட்டான்.

ஒரு கம்பெனியில் விற்பனை ஆலோசகராக இருக்கும் ஒருவர் இதனை அவதானித்துக் கொண்டிருந்தார். அவர் அம்முதியவரை அழைத்து "அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களுக்கு இல்லையே! அவனுக்கு போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால் தானே மக்கள் வாங்குவார்கள். உங்களிற்கும் விற்பனையாகும். அதிக கொள்முதல் மூலம் குறைந்த விலையில் பழங்களை வாங்கி இலாபத்தை குறைத்து அதிக விற்பனை செய்ய பழகுங்கள் ஐயா" என்று தனது ஆலோசனையை கூறினார்.

அதற்கு அந்த முதியவர் சிரித்துக்கொண்டே "போய்யா, இந்தப் பழமும் அவனது தான், அந்தப் பழமும் அவனது தான். அவன் என் மகன்தான், 'ஆறு பழம் பத்து ரூபாய்' என்று விற்றால் சட்டென வாங்குவதற்கு நம் சனத்திற்கு மனம் வராது. இதுவே 'ஐந்து பழம் பத்து ரூபாய்' என்று நான் கூவிக் கொண்டு போவேன். அவன் வந்து ஆறு பழம் பத்து ரூபாய் என்றதும் "அடடே இலாபமா இருக்கே" என்று சனங்கள் சட்டென்று வாங்குவினம். சனங்களின் மனத்தை மாத்திறத்துக்குத்தான் என்னை முன்னால அனுப்புறவன், அவன் வியாபார தந்திரி தம்பி" என்றாரே பார்க்கலாம்.

ஆலோசனை கூறியவர் சிலையாகிப் போனார்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1140-பிரெஞ்சுக் கல்வியாளர் பியேர் அபேலார்டு சமயமறுப்புக்காக குற்றவாளியாகக் காணப்பட்டார்.

❖1326-உருசியாவுக்கும் நார்வேக்கும் இடையில் எல்லையை வரையறுக்கும் நொவ்கோரத் உடன்பாடு எட்டப்பட்டது.

❖1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேற்கு வர்ஜீனியாவில் பிலிப்பி நகரில் இடம்பெற்ற சமரில் அமெரிக்கக் கூட்டணியின் படைகள் கூட்டமைப்பின் படைகளைத் தோற்கடித்தனர்.

❖1950-பிரான்சின் எர்சொக், லாச்சினால் ஆகியோர் 8,091 மீற்றர் உயரமான அன்னபூர்ணா 1 மலையின் உச்சியை அடைந்த முதலாவது மனிதர் என்ற சாதனையைப் படைத்தனர்.

❖1965-நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.

❖1973-சோவியத் சுப்பர்சோனிக் டியூ-144 வானூர்தி பிரான்சில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்ததில் 14 பேர் உயிரிழந்தனர்.

❖1991-ஜப்பானில் கியூசுவில் உன்சென் மலை வெடித்ததில் 43 பேர் உயிரிழந்தனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஆவார்.

❖2007-விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்ப் பணியாளர்கள் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

❖2012-லாகோஸ் நகரில் 153 பேரை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைவரும், தரையில் 10 பேரும் உயிரிழந்தனர்.

❖2013-வடகிழக்கு சீனாவில் சிலின் மாகாணத்தில் கோழிப் பண்ணை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 119 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புகள்**

❖1808-ஜெபர்சன் டேவிஸ், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் அரசுத் தலைவர் (இ. 1889)

❖1873-ஒட்டோ லோவி, நோபல் பரிசு பெற்ற செருமானிய-அமெரிக்க மருந்தியலாளர், உயிரியலாளர் (இ. 1961)

❖1924-மு.கருணாநிதி, தமிழ்நாட்டின் 3 ஆவது முதலமைச்சர், எழுத்தாளர்

❖1929-சிமன்பாய் படேல், இந்திய அரசியல்வாதி (இ. 1994)

❖1930-ஜார்ஜ் பெர்னாண்டஸ், இந்திய அரசியல்வாதி

❖1931-ராவுல் காஸ்ட்ரோ, கியூபாவின் 18 ஆவது அரசுத்தலைவர்

❖1961-லோறன்ஸ் லெசிக், அமெரிக்க நூலாசிரியர், படைப்பாக்கப் பொதுமங்களின் நிறுவனர்

❖1966-ராதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

❖1966-வசீம் அக்ரம், பாக்கித்தானியத் துடுப்பாளர்

❖1986-ரஃபேல் நடால், எசுப்பானிய டென்னிசு வீரர்

**இறப்புகள்**

❖1963-இருபத்திமூன்றாம் யோவான் (திருத்தந்தை) (பி. 1881)

❖1990-ராபர்ட் நாய்சு, இன்டெல் நிறுவனத்தை நிறுவிய அமெரிக்க தொழிலதிபர், இயற்பியலாளர் (பி. 1927)

❖2016-பாலு ஆனந்த், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், நடிகர்

**சிறப்பு நாள்**

❖மாவீரர் நாள் (உகாண்டா)

❖மாபோ நாள் (அவுஸ்திரேலியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 50 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 430 | 500 | 600 |
| தக்காளி | 200 | 300 | 240 | 300 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 35 | 50 | 40 |
| கோவா | 180 | 200 | 120 | 180 | 200 |
| கரட் | 220 | 400 | 240 | 280 | 400 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 80 | 120 | 130 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 35 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 100 | 150 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 110 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 240 | 320 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 140 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 65 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 140 | 55 | 100 | 160 |
| லீக்ஸ் | 300 | 400 | 200 | 240 | 300 |
| பீற்றூட் | 160 | 200 | 80 | 200 | 200 |
| கறிமிளகாய் | 220 | 400 | 125 | – | 400 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 400 | 600 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 130 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | 40 | – | 60 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 50 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 70 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 25-50 | 55 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 200 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 220 | 240 | 280 |
| முள்ளங்கி | 100 | 100 | 60 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 10 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 120 | 60 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு காப்பதற்கு – உனக்கு
ஞானம் சிறிதும் உண்டோ?

*– மகாக்கவி பாரதியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடபுலத்துக் காணிகளை தென்பகுதிக்கு வழங்குவதோ!

எங்களிடம் நிலம் இருந்தால்தான் எதையும் நாம் செய்ய முடியும் என்றார் தந்தை செல்வநாயகம்.

ஆனால் இன்று தமிழ் மக்களின் நிலங்களை கபளீகரம் செய்வதிலேயே தென்பகுதித் தரப்புக்கள் மிகத் தீவிரமாக உள்ளன.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை வேரறுப்பதற்காக சிங்களக் குடியேற்றங்களை வடக்கில் தாராளமாக ஏற்படுத்துவதில் அதிதீவிரம் காட்டப்படுகிறது.

குறிப்பாகவன்னிப்பகுதியில்அரசகாணிகளை சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கான திட்டங்கள் மிக நுட்பமாக அரங்கேற்றப்படுகின்றன.

காணி அதிகாரத்தை மத்தியில் வைத்துக் கொண்டு வட பகுதியில் சிங்கள மக்களுக்குக் காணிகளை வழங்கி அவர்களை குடியமர்த்தி விட்டால்,

கணிசமான சிங்களக் குடிசனம் வட பகுதியில் நிலைகொண்டு விடும். இதனைச் செய்வதனூடாக, சிங்கள மக்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கென இராணுவ முகாம்களை அமைத்தல் அல்லது ஏலவே இருக்கின்ற இராணுவ முகாம்களைத் தொடர்ந்தும் பேணிப்பாதுகாத்தல், வடக்கில் சிங்களப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தல் என்பவற்றினூடாக வட பகுதியில் இருக்கக்கூடிய தமிழ் இனப்பரம்பலை தகர்த்துவிடுதல் என்ற மிக மோசமான சதித்திட்டங்கள் நடந்தேறுகின்றன.

எனினும் இந்த சதித்திட்டங்களை இன்னமும் அறியாதவர்களாக நம் தமிழ் அரசியல் தலைவர்கள் இருப்பதுதான் மிகப்பெரிய அபத்தம்.

எதுவாயினும் இது விடயத்தில் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

பொதுவில் வட புலத்தில் இருக்கக்கூடிய அரச காணிகளை தென்பகுதியினருக்கு வழங்குகின்ற வேலைத்திட்டங்கள் ஏதோவொரு வகையில் பிரதேச செயலகங்களுக்குத் தெரிய வரும்.

இவ்விடத்தில் தமிழ் உத்தியோகத்தர்கள் இத்தகவல்களை தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எங்கெல்லாம் காணி கபளீகரம் நடக்கிறதோ அந்தத் தகவல் அந்தந்தப் பகுதி மக்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துவதன் மூலம் அந்தந்தப் பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நிலக்கபளீகரத்தை தடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில ஆக்கிரமிப்புத் தொடர்பில் அந்தந்தப் பிரதேச மக்கள் விழிப்பாகவும் எந்த நேரத்திலும் வீதிகளில் இறங்கி அகிம்சை வழியில் போராடவும் தயாராக இருந்தால் தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தும் நயவஞ்சகத் திட்டங்கள் தவிடுபொடியாகும்.

இதற்காக இளைஞர்கள் இணையவழித் தொடர்புகளைப் பயன்படுத்தி தகவல் பரிமாறிக் கொள்ளலாம்.

உதாரணமாக முல்லைத்தீவில் அரச காணிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகிறது என்ற தகவல் முல்லைத்தீவின் மூலைமுடுக்கெல்லாம் பரவ வேண்டும்.

இதன் அடுத்தபடியாக வரலாற்று முக்கியத்துவம்மிக்க முல்லைத்தீவு மண்ணை சிங்களமயப்படுத்தும் செயல் இடம்பெறுகிறது என்ற செய்தி அத்தனை தமிழ் மக்களுக்கும் விளங்கும் படியாக அறிவிக்கப்படுவதும் கட்டாயம்.

கூடவே நீதி நியாயம் உணர்ந்த சிங்கள மக்களுக்கும் தென்பகுதியில் இயங்கும் மனித நேய அமைப்புகளுக்கும் இதனைத் தெரியப்படுத்துவதன் மூலமாகத் தமிழர் தாயகத்து மண்ணை நாம் காப்பாற்ற முடியும்.

இதைச் செய்வதில் தமிழ் அரச உத்தியோகத்தர்களின் தார்மீகப் பணி மிகமிக அவசியம்.

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த தொடர்பில்

# ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தி வரவேற்கத்தக்கது – அஜித் பி பெரோ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீன துறைமுக நிறுவனத்திடம் இருந்து கடன்களை முறைகேடாக பெற்றுள்ளார் என்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியானது வரவேற்கத்தக்கது என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரோ தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம்ஆண்டுஜனாதிபதி தேர்தலுக்காக முன்னாள் ஜனாதிபதிக்கு சீன துறைமுக நிறுவனம் 7.6 பில்லியன் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் அரசாங்க தரப்பில் எவ்வித ஆவணங்களும் காணப்படவில்லை.

இந் நிலையில் கடன்களை பெற்றுக்கொள்ளும் போது கடந்த அரசாங்கம் பல சூட்சமமான விடயங்களை பின்பற்றியுள்ளமையே இன்று பாரிய சிக்கல்களை தேசிய அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளது.

எனவே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இல்லாவிடின் இந்த முறையற்ற கடன்கள் எதிர்காலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார். (ம)

## வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் விளக்கமறியலில்

வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை கரணவாய் முதலைக்குழி பகுதியில் இடம்பெற்ற இவ் வாள்வெட்டு சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த ரிசிகரன் ரேகன் என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார் இரண்டு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

இதில் மூன்றாவது சந்தேகநபர் தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-60)

# மன்னாரில் மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலுள்ள சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர். ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையில், மனித எச்சங் களைத் தேடி நேற்று 25ஆவது நாளாகவும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இது வரை கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை கிடைத்த மனித எச்சங்கள் சிதைவடைய வாய்ப்புகள் காணப்படுவதாகவும், அதனால் அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர்

இந்நிலையில், அகற்றப்பட்ட மனித எச்சங்கள் யாவும் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டு, அகழ்வுப் பணி முற்றாக நிறைவடைந்த பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சதொச வளாகத்தை அகலப்படுத்தி அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (ம)

## ஈழத்து சீரடி நாதருக்கு 1008 சங்காபிஷேகம்

ஈழத்து சீரடி சாயி நாதரின் நவோத்திர சகஸ்ர (1008) சங்காபிஷேகமும் திரிமுக தர்சன வீதி உலாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நாவலர் வீதியில் அமைந்துள்ள சாயிநாதர் ஆலயத்தில்நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு கடஸ்தாபனம் தொடர்ந்து ஏனைய பூஜைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை இடம் பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருப்பொன்னூஞ்சல்திரிமுகதர்சன காட்சி வழங்கி தண்டிகையில் சாயி நாதர் ஆலயத்திலிருந்து மருதடி வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதியூடாகதிருவீதிஉலாவந்துஆலயத்தை வந்தடைவார். (ம-78)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அபிஷேக பொருட்களும் அதன் பலன்களும்**

நாரத்தம் பழம் - நல்ல புத்தி
தேங்காய் துருவல் - அரசுரிமை
சர்க்கரை - பகையை அழித்தல்
பால் - ஆயுள் விருத்தி
தயிர் - சந்தான (அல்லது)மக்கள் விருத்தி
இளநீர் - நல்ல புத்திரப் பேறு
கருப்பஞ்சாறு - சாஸ்திர தேர்ச்சி
அரிசிமாப்பொடி - பிறவிப்பிணி நீங்குதல்
பஞ்சகவ்யம் - ஆத்ம சுத்தி, பாவ நிவர்த்தி
எலுமிச்சை பழம் - யம பயம் நீங்குதல்
நெல்லிமுள்ளிபொடி - நோய் நீங்குதல்
அன்னம்- ஆயுள், ஆரோக்யம், தேகம் அபிவிருத்தி *(தொடரும்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதனகிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில மலையாபருத்திக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், சுந்தரபுரம் கிராமம், மணிபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- சுயநலநோக்கத்துடன் செயல்படும்போது நம் ஆற்றல் அனைத்தும் சிதறி வீணாகின்றன. ஆற்றல் உங்களிடம் திரும்பி வருவதற்கான வழி சிறிதும் இல்லை.
- உங்கள் இதயத்தில் ஒரு வெட்டவெளி இருப்பதாக நினையுங்கள். அதில் சுடர் ஒன்று ஒளிவீசிப் பிரகாசிப்பதாக எண்ணி தியானத்தில் ஆழ்ந்து விடுங்கள்.
- மனம் என்னும் கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து உடலையும், புலன்களையும் நல்வழியில் நடத்திச் செல்வதே தவம்.
- ஒருமுகத் தன்மையுடன் ஒருசெயலில் ஈடுபடப் பழகினால் உடலுக்கு புத்துணர்வு உண்டாகும்.
- சிறிது நேரம் பழகினாலும் கூட நல்லவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அந்த தொடர்பால் பிறவிக் கடலைக் கடக்கும் வழி கிடைக்கும்.
- ஒரு குறிக்கோளைத் தேர்ந்தெடுங்கள். அதைப் பின்பற்றுங்கள். முடிவை எட்டும் வரை விட்டு விடாதீர்கள். லட்சியத்தில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணம் மீண்டும் ஓல்ட்கோல்ஸ் அணி முன்னிலையில்



ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2018 தொடக்கம் 31.03.2018 வரை நடைபெற்ற 28 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஓல்ட் கோல்ஸ் அணி 10 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 38.72 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தில் உள்ளது.

கே.சி.சி.சி. 25.53 (08/05) யாழ்.பல்கலைக்கழகம் 25.04(04/03), யாழ்.ஜொனியன்ஸ் 12.49 (02/01), மானிப்பாய் பரீஸ் 12.25 (03/01), ஜொலிஸ்ரார் 11.31 (05/00), திருநெல்வேலி சி.சி. 09.50 (02/02), டிபேர்க்ஸ்ரார் 09.05 (05/01), திருநெல்வேலி YMHA(8.29 ( 04/02), சென்றலைட்ஸ் 07.79 (01/01), விங்ஸ் 08.29 (01/01), நியூஸ்ரார் 03.06 (01/00), ஸ்கந்தாஸ்ரார் 02.99(01/06) றெயின்போ 02.85 (01/00), யூனியன்ஸ் 02.73 (02/00), அரியாலை சென்றல் 02.61(01/00),யாழ். சென்றல் 01.64 (01/00), ஆளுநர் வெற்றிக் கிண்ணத் தொடரில் 1 போட்டியும், விக்ரம் ராஜன் கங்கு வெற்றிக்கிண்ணத் தொடரில் 7 போட்டிகளும் மானிப்பாய் பரீஸ் வெற்றிக் கிண்ணத் தொடரில் 10 போட்டிகளும் பிரிவு III தொடரில் 5 போட்டிகளும் கே.சி.சி.சி.தொடரின் 2 போட்டிகளும் விஜியரட்ணம் வெற்றிக் கிண்ணத் தொடரில் 3 போட்டிகளும் எல்லாமாக 28 போட்டிகளாகும். (க)

## வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்

### வவுனியா வோரியர்ஸ் வெற்றி



வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின் இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று லீக் போட்டிகளின் 22 ஆவது போட்டியில் வவுனியா வோரியர்ஸ் அணியை எதிர்த்து மாதோட்டம் எப்.சி. அணி மோதியது. இதில் வோரியர்ஸ் அணி 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

## முல்லை பீனிக்ஸ் அணி வெற்றி

வடக்கு-கிழக்கு மாகாண வீரர் களை ஒன்றிணைத்து நடத் தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இதில் 28 ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று லீக் போட் டிகளின், 21 ஆவது போட்டியில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

இதில் முல்லை பீனிக்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள அணிகளுக்கிடையில் Jaffna cricket league எனும் மாபெரும் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்து அனுப்பவும். விண்ணப்பங்களைப் பெறுவதற்கு 077 763 2048.075 555 5766 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (க)

# மரண அறிவித்தல்

# சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம்



இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் மோட்டோர்ஸ் உரிமையாளர் சி.ம. கணபதிப்பிள்ளை சிவலிங்கம் கடந்த (30.06.2018) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையார் விலாஸ் உரிமையாளர் சி.ம.கணபதிப்பிள்ளை-அன்னலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற டெனியா தாமோதரம்பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி இராசலெட்சுமியின் அன்புக் கணவரும் சிவாநந்தன், சிவகுமாரன், சிவஅன்பு சிவசோதி, சிவபாலன் (கனடா), சிவசக்தி(கனடா) மற்றும் சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியத்தின் பெறாமகனும், பிள்ளையார் இன் உரிமையாளர் ரெட்ணேஸ்வரனின் சித்தப்பாவும், சாராதாதேவி, மலர்விழி, சர்மிலா, ராகினி(கனடா), விஜேந்திரன் (கனடா), லகுசியாமா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானுஜன், சிவருஜன், சிவனிஜன், நிருஜிகா சிவநீவன், பவானிகா (கனடா), கர்நிகன் (கனடா), சிவாஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராசதுரை, பிள்ளையார் மெற்றன் உரிமையாளர் குணரெட்ணம் (கனடா), அபிமன்யு (லண்டன்), காலஞ்சென்ற சகாதேவன், தையல்நாயகி, கமலநாயகி, காலஞ்சென்ற சற்குணதேவி, காலஞ்சென்றவர்களான தர்மு, பரிமளம், நளாயினி, பீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன், கர்ணன் ஆகியோரின் சகோதரரும், ரூபவதி (சுவிஸ்), சரஸ்வதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், பாலசுப்பிரமணியம், பாக்கியலெட்சுமி (கனடா), இராசேந்திரன் ( NTR ரான்ஸ்போர்ட்), புவனேஸ்வரி (கனடா), இராஜலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் (கனடா), சாரதாமணி (இந்தியா), காலஞ்சென்ற தேவலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவஜோகம், வரலெட்சுமி (கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற லயன் பிராண்ட் ஏஜன்ஸ்சி இரத்தினசிங்கம், பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற கட்டடப் பரிசோதகர்), காலஞ்சென்ற தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலர்வு:-28.04.1938
உதிர்வு:-30.06.2018

021 222 3212

தகவல்:- குடும்பத்தினர்.
(சிவலிங்கம் மோட்டோர்ஸ்)

(4773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

தலைவர் மாவட்ட பெறுகைக்குழு/மாவட்ட உதவி ஆணையாளர். கமநல அபிவிருத்தித் திணைக்களம். முல்லைத்தீவு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த தாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

- நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப் பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

1. விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம். முல்லைத்தீவு எனும் முகவரியில் 03.07.2018 தொடக்கம் முற்பகல் 9.00 மணியிலிருந்து மாலை 2.30 வரை விலைக் கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநலஅபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 03.07.2018 முதல் 23.07.2018 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தலைவர். மாவட்ட பெறுகைக்குழு. கமநல அபிவிருத்தித் திணைக்களம். முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 23.07.2018 ஆம் திகதியன்று பி.ப 01.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர். மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப் பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலை யில் 23.07.2018ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி **(Original)** தனியாகவும் நகல் **(copy)** தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவான தாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணைபொறுப்பு (Bid Security) 23.10.2018ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் இணைக்கவும் இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.
9. கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல். வங்கி கணக்கு அறிக்கை. கடந்த கால வேலை விபரங்கள். தொழில் நுட்ப உத்தியோகத்தரின் முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. குறித்த வேலைகளுக்கான முதற் கூட்டம் (Pre bid Meeting) 10.07.2018 திகதி முற்பகல் 10.00 கமநல அபி விருத்தித் திணைக்களம். முல்லைத்தீவில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு கேள்வி மனுசமர்ப்பிக்க எதிர்பார்போர் அனைவரும் கலந்து கொள்ளவேண்டியது கட்டாயமாகும். கூட்டத்திற்கு சமுக மளிப்பவருக்கு மதிப்பீட்டின்போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன் வரி நீங்கலாக) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mu/DAD/ Tender/ 2018/39-09 | அரசன்குளம் | 3.94Mn | 23/10/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 40,000.00 | கொக்குத் தொடுவாய் |
| 2 | Mu/DAD/ Tender/ 2018/39-10 | சின்னக்குளம் | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |
| 3 | Mu/DAD/ Tender/ 2018/39-11 | சூரியனாறு ஏழுவெளி அணைக்கட்டு | 4.23Mn | | | 43,000.00 | கொக்குத் தொடுவாய் |
| 4 | Mu/DAD/ Tender/ 2018/39-12 | சலப்பையாறு ஏழுவெளி அணைக்கட்டு | 4.17Mn | | | 43,000.00 | கொக்குத் தொடுவாய் |
| 5 | Mu/DAD/ Tender/ 2018/39-13 | அஞ்சிலாக்குளம் கால்வாய் | 2.75Mn | | | 30,000.00 | புதுக்குடியிருப்பு |
| 6 | Mu/DAD/ Tender/ 2018/39-14 | பேராறு அணைக்கட்டு கால்வாய் | 4.16Mn | | | 43,000.00 | புதுக்குடியிருப்பு |
| 7 | Mu/DAD/ Tender/ 2018/39-15 | காளி கோவில் அணைக்கட்டு | 3.19Mn | | | 35,000.00 | புதுக்குடியிருப்பு |
| 8 | Mu/DAD/ Tender/ 2018/39-16 | தச்சடம்பன் அணைக்கட்டு | 4.00 Mn | | | 43,000.00 | ஒலுமடு |
| 9 | Mu/DAD/ Tender/ 2018/39-17 | விளாப்புக்குளம் அணைக்கட்டு கால்வாய் | 2.50Mn | | | 27,000.00 | ஒட்டுசுட்டான் |
| 10 | Mu/DAD/ Tender/ 2018/39-18 | விளாப்புக்குளம் அணைக்கட்டு | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |

தலைவர். மாவட்ட பெறுகைக்குழு.
கமநலஅபிவிருத்தித் திணைக்களம். முல்லைத்தீவு.

(சி-3130)

# புலிகளை மீண்டும் உருவாக்க...

டும் வீடு திரும்பவேண்டுமானால் வடக்கு கிழக்கிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என அவர் தெரிவித்த போது மண்டபத்தில் இருந்த ஏராளமான அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பலத்த கரகோசங்களை எழுப்பி அந்த கருத்தை வரவேற்றனர்.

"ஜனாதிபதி மக்கள் சேவை" 8ஆவது தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

எமது பிரதேசத்தில் பெண்களுக்கு சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எமது ஜனாதிபதி என்ன செய்கிறார்? தனது கட்சியை வளர்கிறார். மக்களை பாதுகாப்பதாக தெரியவில்லை. இதற்காகவா தலையால் நடந்து நாம் அவரை ஜனாதிபதியாக்கினோம்?

நாம் தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் எவ்வாறு வாழ்ந்தோம் என ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாக உணர்கிறோம். உண்மையில் இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் உருவாக்க வேண்டும் என்பதே எமது முக்கிய நோக்கமாக உள்ளது.

நாங்கள் உயிருடன் வாழவேண்டுமானால். நாங்கள் நிம்மதியுடன் வீதிகளில் நடக்கவேண்டுமானால். எங்களுடைய பிள்ளைகள் பாடசாலை சென்று மீண்டும் வீடு திரும்பவேண்டுமானால் வடக்கு கிழக்கிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும்.

30 வருடங்களாக நாம் போருக்கு முகம் கொடுத்துள்ளோம். கடந்த அரசு என்ன செய்தது. கடந்த 3 வருடங்களாக இந்த அரசு எமது காணிகளை விடுவித்தார்கள். அதற்கு அப்பால் எதையும் செய்ய வில்லை.

எமது இளையோர்கள் தமது வேலைவாய்ப்புக்காக வீதிகளில் தடுமாறுகின்றார்கள். வேலைவாய்ப்புக் கிடைக்காததால்தான் இளைஞர்கள் மதுபோதைக்கு ஆளாகின்றார்கள்.

மதுபோதையைக் கொண்டு வந்தவர்கள் யார்? 2009 மே 18 இற்குப் பின்னர் போரை முடிவுக்கொண்டு வந்த கடந்த கால அரசு. அரசியல்வாதிகளின் ஊடாக அவர்களுடைய வாகனங்களிலே போதைப்பொருள்களை வடக்கு கிழக்குக்கு அனுப்பியுள்ளார்கள். போதைப் பொருளின் ஆதிக்கம் இன்று வடக்கு-கிழக்கிலே தலைதூக்குகின்றது. இதற்கு அப்பால் நாம் எப்படி அரசியல் பேச முடியும்? எமது இளைஞர்களை முடக்குவதற்காக இவ்வாறு செயற்பட்டுள்ளார்கள்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த கடந்த கால அரசு. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத்தைக் கொடுத்ததா? அல்லது படித்த இளையோருக்கு வேலைவாய்ப்பை வழங்கியதா? ஒன்றுமே செய்யப்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு எதை செய்தார்கள்? என்ன வருமானம் உண்டு?

ஆனால் முன்னைய காலத்தில் எமது சமூகதத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களும் இல்லை. யாரிடமும் கையேந்திய வரலாறும் எமக்கு இல்லை. எங்களுடைய கைகளிலே நாம் வாழ்ந்தோம்.

இன்று 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் உள்ளார்கள். இவர்களுக்கு எங்களுடைய ஜனாதிபதி என்ன செய்திருக்கின்றார். அரசால் வழங்கப்படுகின்ற நிதியை நிராகரித்திருக்கின்றார். தெற்கில் தான் வெல்வதற்காக. வாக்குவங்கியை பெறுவதற்காக எமது முன்னாள் போராளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஜனாதிபதி நிராகரித்துள்ளார். அவர்கள் மனிதர்களில்லையா? ஆயுதத்தை ஏந்தியதால் அவர்கள் மனிதர்கள் இல்லை என்று நீங்கள் நிராகரிக்கின்றீர்களா? அவர்கள் மண்ணுக்காக போராடியவர்கள்.

நாங்கள் தலையால் நடந்து எங்கள் ஒற்றுமைக்காகவும் தீர்வுக்காகவும் வாக்களித்து அவரை ஜனாதிபதியாக ஆக்கினோம். ஆனால் அவருக்கு எதிராக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை எமக்கு எதிராக அவர் அமைச்சர்களாக நியமித்துள்ளார். அதனைத்தான் அவர் வடக்கு மக்களுக்கு செய்துள்ளார்.

சொல்ல வெட்கமாகவுள்ளது. எத்தனை பட்டதாரிகள் எம்மிடம் வருகிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் தடுமாறுகிறோம். தெற்கில் இருந்து எத்தனை யுவதிகள் வடக்கில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எமது இளைஞர்கள் வீதிகளில் இருக்கிறார்கள்.

வடக்கு கிழக்குக்கு விகிதாசாரத்தில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். வடக்கு கிழக்குக்கு விசேட செயற்திட்டம் கொண்டு வர வேண்டும். எமது மக்களின் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ஆனால் பல கட்சிகள் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைத்த காரணத்தினால். சரியான திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தனிக்கட்சி ஆட்சி புரிந்தால் தான் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# பட்டதாரி இளைஞன்...

காமம் பகுதியில் உள்ள வீடொன்றில் 29வயதான இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 29வயதான கிருஸ்ணை பிள்ளை சத்தியசீலன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு பிரதே பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொடிகாம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவரென்பதுடன் அரச வேலைவாய்ப்பிற்காக காத்திருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி இ.இளங்கீரம் மேற்கொண்டுள்ளார். (ம-9.30.78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவனை...

ளடைப்பைச் சேர்ந்த 15 வயதுடைய கோவிந்தராசா விஷ்ணு என்ற பாடசாலை மாணவன் காணாமல் போயுள்ளார்.

குறித்த மாணவனை நேற்று முன்தினம் மாலை 4 மணியில் இருந்து காணவில்லை என அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர். இவர் யாழ்ற்றன் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்று வருகின்றார். இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவன் தொடர்பான விபரங்களை அறிந்தவர்கள் 0771871064, 0774985357 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவரது உறவினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம)


ரூ.75,000 - ரூ.215,000 சம்பளத்துடன் டுபாய் வேலைவாய்ப்புக்கள்

வீட்டு மின் உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள் விற்பனை காட்சியறையில்

முகாமையாளர்

விற்பனை உத்தியோகத்தர்கள்

பிரதிநிதிகள்

விபரங்களுக்கு 0777 324 004

ஜூலை மாதம் பயண ஏற்பாடு

10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY Business · Hospitality · English FAST TRACK to CAREERS Sri Lankan Entrepreneur of the Year 2017

Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists

221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் 021 - 222 00 11

077 00 38 215
077 55 46 956
021 221 9 221


## மக்கள் பிரதிநிதி...

த்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

நல்லாட்சி அரசு எமது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறி வருகிறார்கள். நாம் அமைச்சரவைகளில் பங்காளிகள் அல்ல. பதவிக்கு போட்டியிடவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக மக்கள் இழந்தவற்றை மீள கட்டியெழுப்புவதற்காக அரசுடன் இணைந்து பயணிக்கிறோம்.

வெற்றி அடைந்த வருடம் வடக்கு மாகாணத்தின் மீள் குடியேற்றத்துக்கு 14 ஆயிரம் பில்லியன் நிதி ஒதுக்கினார்கள், அடுத்த வருடம் 9 ஆயிரம் பில்லியன் ஒதுக்கினார்கள், அடுத்த வருடம் 5 ஆயிரம் பில்லியனுக்கு குறைவாக ஒதுக்கியுள்ளார்கள். எமது மக்களுக்கு ஆயிரம் தேவைகள் உள்ள போதும் 100 தேவைகளை கூட சரியான முறையில் நிறைவேற்றவேண்டும். ஆனால் அது நடப்பதாக தெரியவில்லை.

ஜனாதிபதி, பிரதமருடன் பல தடவைகள் பேசியுள்ளோம். பயனில்லை. இனி உரத்து குரல் கொடுக்க பொறுத்திருக்கிறோம். எமக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை என்பதால் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

மக்கள் எமக்கு தந்த பொறுப்பை நிறைவேற்றும் முயற்சியில் முழுமையாக அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. பெரிய விடயங்களில் தான் தாமதம் என்றால் சிறு விடயங்களை கூட நிறைவேற்ற வில்லை. நிறைவேற்றாததுக்கு அரசு பதில் தர வேண்டும்.

ஜனாதிபதி அண்மையில் ஒரு செயலணியை உருவாக்கியுள்ளார். அமைச்சரவையில் உள்ளவர்களை மாத்திரம் வைத்து உருவாக்கியுள்ளார். அது தொடர்பாக கண்டணம் தெரிவிக்க ஆயத்தமாக உள்ளோம். மக்களால் தெரிவு செய்யப்பட்டு பல காலம் மக்களுக்காக குரல் கொடுத்துவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாம் இருக்கும் போது அவர் எம்மை தவிர்த்து அந்த செயலணியை உருவாக்கியுள்ளார். என்ன திட்டத்துக்காக இதை உருவாக்கியுள்ளார்?.

முஸ்லிம் பிரதிநிதியை நியமிப்பது தவறில்லை. முதலமைச்சர் நியமிக்கப்படுவதும் சரி. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் இருக்கும் போது வேறு ஆட்களை நியமிப்பது எந்தவகையில் நியாயம். எந்தளவு மகிழ்ச்சியுடன் ஜனாதிபதியை தெரிவு செய்தோம். அந்த அளவுக்கு எம்மை துக்கப்பட வைத்துவிட்டார் ஜனாதிபதி.

ஜனாதிபதியும் பிரதமரும் தெற்கில் தனித்தனியாக நடவடிக்கைகளை மேற்கொள்வது போல் வடக்கில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம். வடக்கு கிழக்கில் ஒன்றாக நின்று செயற்திட்டங்களை நடத்துங்கள்.

வடக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. இதற்கு யார் பொறுப்பு கூறுவது. இங்கு பொலிஸ் சட்ட திட்டங்கள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நடக்கும் சீர்கேடுகளுக்கு பொறுப்பு கூறவேண்டியது பொலிஸாரின் கடமை. குற்றங்கள் நிறுத்தப்படவேண்டும். வடக்கில் மக்களை மூழ்கடித்துள்ள நுண்கடன் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)


விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



மருந்தாளர் தேவை

முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் தனியார் மருந்தகத்திற்கு (Jathu Pharmacy) மருந்தாளர் தேவைப்படுவதனால் தகைமையுள்ள மருந்தாளர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 350 4003

முகவரி:- மாவட்ட பொது வைத்தியசாலை முன்பாக தண்ணீரூற்று, முல்லைத்தீவு.


## எனது அரசை...

சினிமா கலைஞரான ரோய் டி சில்வாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி, அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

2015ம் ஆ[illegible] ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைகளுக்காக சீனா 7.6 மில்லியன் டொலர் நிதியை வழங்கியதாக அமெரிக்க ஊடகம் வெளியிட்டுள்ள செய்தி பூதாகரமாகியுள்ளது.

இச்செய்தியை மறுத்து அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த மகிந்த, எமது அரசாங்கத்தை கவிழ்க்க அமெரிக்கா நிதியுதவி செய்த[illegible]ள்ளது. எமது [illegible]சியை கவிழ்க்க அமெரிக்கா 600 மில்லியன் செலவழித்ததாக, பணம் வழங்கிய அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலாளர் ஜோன் கெர்ரியே தெரிவித்துள்ளார்.

ஆனால், இது தொடர்பாக எவரும் கருத்துக்களைகூறவோ நடவடிக்கைகளை எடுப்பதாகவோஇல்லை அதுமட்டுமின்றி, தமது ஏனைய குற்றங்களை மறைக்கவே அமெரிக்க ஊடகத் தகவலை அனைவரும் பெரிதுபடுத்துகிறார்கள எனக் குறிப்பிட்டார். (ம)


வேலைவாய்ப்பு

கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்

- புத்தகம் கட்டுநர்கள் (Binding) பெண்
- Screen Printing தெரிந்தவர்கள் ஆண்/பெண்
- Envelope ஒட்டுபவர்கள் பெண்
- திருமண அழைப்பிதழ் தயாரிப்பவர்கள் பெண்

● கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

வியாழக்கிழமை (05.07.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

PRINT MASTER 136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். 0776622981 | 0777481696



உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மற்றும் நெல்லியடி கிளைகளுக்கு A/L படித்த ஆங்கில மற்றும் கணினி அறிவுடைய பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
T.P:- 071 141 8711, 077 755 4528



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நான்காவது வருடமாகவும்

தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

இறுதிச் செயலமர்வு

இம்முறை A/L 2018 மாணவர்களுக்காக

- பொறியியற் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- I.C.T, விவசாயம்,புவியியல், ஊடகக்கற்கை

காலம் 6 - 14ஆம் திகதி வரை

நேரம் காலை 8.30 - 2.00

இறுதிப் பரீட்சை தொடர்பான மாணவர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களுக்கும் இச் செயலமர்வில் விடை கிடைக்கும்.

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு 0772487774


## மரண அறிவித்தல்



### கிருஸ்ணமூர்த்தி ஐயர் மதுராம்பிகை (தங்கம்மா)

இந்தியா தஞ்சாவூரை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் நீர்வேலியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணமூர்த்தி ஐயர் மதுராம்பிகை நேற்று முற்பகல் (02.07.2018) திங்கட் கிழமை அன்று காலமானர்.

அன்னார் லலிதாம்பிகை, ரஞ்சனா ஆகியோரின் தாயாரும், நாகேந்திர ஐயர், காலஞ் சென்ற சோமசுந்தரக் குருக்கள் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.07.2018 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. தொ.பே:- 021 223 0224

தகவல்
குடும்பத்தினர்

## போட்...

இப்பரீட்சையானது கடந்த 19.05.2018 அன்று நடைபெற்றிருந்தது. பரீட்சை முடிவுகளை www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org